
போனஸ்-1
குறுநாவல்
யாகப் பசுக்கள்
இந்திரா செளந்தர்ராஜன்

இந்திரா சௌந்தர்ராஜனின் 75வது பாக்கெட் நாவல்

குண்டும் குழியுமான வீதி அது.

மிக நீண்டு, அங்கங்கே ஒடுங்கி வளைந்து, தனது இரு புறத்திலும் பணக்காரத்தனம் இல்லாத ஓட்டு வில்லை வீடுகளை மாத்திரமே கொண்டு கிடந்தது, காந்தி தெரு. அதன் மேல் படு வேகமாய் ஓடிக் கொண்டிருந்தன உம்மாச்சியின் கால்கள்.

அவன் விழி தெறித்து விழுந்து விடும் கோபத்திலும், குரல் உடைந்து சப்திக்க முடியாத நிலையிலும் இருக்க - அவன் கால்கள் சண்முகத்தின் வீட்டைக் குறிவைத்திருந்தன.

''இந்த ஓூசுப்பய ஏன் இப்படி ஓடுறான்?''-வீட்டுத் திண்ணைமேல் திருவட்டத்தில் நூல் சேர்க்கும் சகுந்தலா இலேசாய் மாய்கிறாள்.

''டேய் பார்த்துப்போடா... ஒட்டப் பந்தயமா நடக்குது, மடப்பயலே'' -வீதியின் வலது ஓரத்தில் குதிரை மரம் நட்டு நீண்ட வெண்பட்டுப்பாவை இழுத்துக் கட்டி, இழைகளைப் பிரித்து, காற்றாட உலர்த்தும் - கொஞ்சம் படித்த கோபாலனின் குரல் இது.

உம்மாச்சிக்குத் தானே தெரியும் அவன் பதற்றம்?

ஒரு வழியாகச் சண்முகத்தின் வீட்டை எட்டி விட்டான்.

''சரசு...சரசு''-வாசற்படியில் நின்று கொண்டு அழைக்க, அழைப்பொலி, பக்கத்து எட்டுத் திக்கு பொட்டி வீடுகளிலும் நுழைய, "உள்ளே சருவம்

www.cleanindians.com



கழுவிக் கொண்டிருந்த சரசு புடைவைத் தலைப்பில் கைகளைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

எல்லோராலும் 'உம்மாச்சி'-என்று கேலியாய், செல்லமாய் விளிக்கப்படும் உ.மா.சிதம்பரம் தனது கலங்கிய விழிகளால் சரசு என்னும் சரஸ்வதியைப் பார்த்த பார்வை அவளின் நெற்றிப் பொட்டையே வெறித்தது

''சரசு...சரசு '' நாகத்துடன் போராடிகளைத்த ராஜாளியின் மூச்சுக் குழலில் காற்றுப்படும் அவஸ்தை அவன் நாசித் துவாரங்களிலும் நிகழ்ந்தது.

''என்ன உம்மா?''-சரசு பாந்தமாய்க் கேட்டாள்.

''சரசு, நம்ம, நம்ம...'' வார்த்தை அவனிடம் கடன்பட்ட வட்டியாய் வரமறுத்துப் பின் வந்தது.

''நம்ம சண்முகத்தை நந்தவனத்து ரெயில் ரோட்டுமேல் சிலர் வெட்டிப் போட்டுட்டாங்க ''-அவன் சொல்லி நிறுத்து முன் வீதி முக்கில் 'ஜே.ஜே' என்று ஒரு கூட்டம். ஏட்டும், போலீஸ்காரரும் சைக்கிளில் வீதிக்குள் நுழைய, பின்னால் 'பொலபொல'வென்று சிதறி, 'சடபுட' வென்று எதை எதையோ பேசியபடி பரபரப்பும், சிலிர்ப்புமாய் ஒரு கூட்டம்.

வீதியின் வீட்டு வாசல்களில் தேங்கி, புடவை மரங்களாய் நின்றுவிட்ட பெண்களின் இதயத் துடிப்பில் ஒரு வேகம் பச்சென்று கூட, ஏட்டும் போலீஸ்கராரும் வெறித்துவிட்ட சரசுவை நெருங்கினர்.

''இவங்கதான் சார் சண்முகம் சம்சாரம். நீங்க வருமுன்ன நான் வந்து விஷயத்தைச் சொல்லிப் புட்டேன்.'' உம்மாச்சி ஏட்டையாவிடம் சரசுவைக் காண்பித்துப் பேசும்போது அவள் மயக்கத்துக்குள் வழுக்க ஆரம்பித்திருந்தாள்.

''சண்முகம் இருக்காங்களா?''

''நீங்க யாரு?''

''என் பேர் காளி. அவரைக் கொஞ்சம் பார்க்கணும்.''

''அவர் இன்னும் சொசைட்டியில் இருந்து வரலீங்களே. வந்தா சொல்றேன்.''

''சரிங்க, ஒரு விஷயம்.''

''என்ன?''

''நீங்க அவர் சம்சாரம் சரசு தானுங்களே?''

''ஆமாம்.''

''இந்த ஐயாயிரத்தை அவர் வந்தாக் கொடுத்துடுங்க. மத்ததை நான் பேசிக்கறேன்.''

பேசிக் கொண்டே காளி என்னும் அவன் ஒரு ஐயாயிரம் ரூபாய்க் கற்றையை நீட்ட, சரசு கொஞ்சம் சிணுங்கி ரூபாயை வாங்காமல் காளியை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

''என்ன தயங்கறீங்க? இது அவர் பணம் தான். கொடுத்துடுங்க, அவர் வந்து விசயத்தைச் சொல்வாரு'' என்றான் காளி.

''வேண்டாங்க. எனக்கென்னவோ பயமா இருக்கு. நீங்க அவர்கிட்டையே..'' சரசு முடிக்கும்முன் வீதி முகப்பில் சண்முகம் வருவது தெரிந்தது.

''அதோ அவரே வந்துட்டாரே..!'' - பேசிவிட்டு சட்டென்று வீட்டுக்குள் நுழைந்து விட்டாள் சரசு. சில நிமிடங்களில் சண்முகம் நுழைந்தான். சரசு ஆவலாகக் கேட்டாள்.

''ஏங்க, உங்களைப் பார்க்க ஒருத்தர் வந்திருந்தாரே?''

''யாருடா?''

''யாரோ காளின்னு... இப்பத்தான்! நீங்க வீதிக்குள்ள நுழையவும், நான் நீங்க பார்த்துப் பீங்கன்னு உள்ள வந்துட்டேன்.''

அந்தப் பெயரைக்கேட்டவுடன் சண்முகம் முகம்

www.cleanindians.com



இறுகிவிட்டது. அதுவரை காதை அடைத்துக் கொண்டிருந்த பசி பறந்துபோக மனசு கவலைக் குளத்தில் விழுந்தது.

''ஏன் ஒருமாதிரி ஆகிட்டீங்க? அந்த ஆளு ஐயாயிரம் ரூபாயைத் தூக்கி என்கிட்ட கொடுத்தான். எனக்கு ஒரு மாதிரியா ஆயிடிச்சு. 'அவர்கிட்டையே கொடுத்துடுங்க'ன்னேன். என்னங்க இதெல்லாம்...?''

''லஞ்சம் சரசு, லஞ்சம் '' கடுகடுப்புடன் சண்முகத்திடம் வார்த்தைகள் வெடித்தன.

ஜி.எச்.சின் வராந்தாக்களிலும், வார்டுகளிலும் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. பளபளவென்று மொசைக் தரையில் டெட்டால் மருந்தின் நெடி கும்மென்று வீச, அதன்மேல் எமர்ஜென்சிவார்டைக்குறிவைத்து ஸ்ட்ரெச்சரைத் தள்ளிக் கொண்டிருந்தாள் ஒரு நர்ஸ். அவளுக்குப் பின்னால் சரசுவுடன் வீதியே திரண்டிருந்தது.

ஒரு முகத்தின் விழியிலாவது நீர் இல்லாமல் இல்லை. ஒரு மேட்ரன் ரொம்பவும் ஆச்சரியப் பட்டுப் போனாள். ''ஒரு தனி மனிதனுக்காக இத்தனை பேர் கலங்கி நிக்கறதை நான் இப்பத்தான் பாக்கறேன். குத்துவெட்டுப்பட்டவர் என்ன பெரிய புள்ளியா?''

''இல்ல சிஸ்டர். ஒரு சாதாரண நெசவாளி தான். ஆனா தங்கமான மனசு. பாரதியார் மாதிரி கவிதையெல்லாம் எழுதுவாராம். அசப்புல பார்த்தா விவேகானந்தர் மாதிரியே இருக்குல்ல...?''

''இப்படிப்பட்டவரை ஏன் இப்படி வெட்டிப் போட்டுட்டாங்க?''

''இந்த நாட்டுல இந்த மாதிரி அடிதடி விஷயமெல்லாம் மோசமான ரௌடிகளுக்கு மட்டும் இல்லை! ரொம்ப நல்லவங்களுக்கும்

கூடப் பொதுவாயிடிச்க சிஸ்டர். எப்படியாவது இவரைக் காப்பாத்தணும். அப்பந்தான் ரொம்பப்பேர் வயித்துல பால் சேரும்.''

''பிழைக்கறது ரொம்பக் கஷ்டம் சிஸ்டர், பிழைச்சாலும் கைய எடுக்கணும்.''

ஸ்ட்ரெச்சர் மளுக்கென்று ஆபரேஷன் தியேட்டரில் நுழைய, கதவுக்கு வெளியே தேக்குமரப் பெஞ்சுகளில் தேங்கியது ஒரு கும்பல். போலீஸ்காரர் ஒருவர் விசாரணையில் மூழ்கியிருந்தார். சாட்சி, கையெழுத்து என்று அங்கே சட்டத்தின் பணி கடை விரிக்க ஆரம்பித்திருந்தது.

''சண்முகத்தைப் பத்தித் தெரிஞ்சவங்க கொஞ்சம் சொல்லுங்கப்பா.'' மஃப்டியிலிருந்த கிரைம் பிராஞ்ச் இன்ஸ்பெக்டர் ஒருவர் கேட்டார்.

''அந்தத் தம்பிய பத்திச் சொல்றதுன்னா விடிய விடியச் சொல்லலாமுங்களே... அது தங்கக் கம்பிங்க. பட்டப்படிப்பு படிச்சிருக்குதுங்க. பேங்குல வேலை வந்தும் போய்ச் சேரலை. ரொம்ப ஏழைப்பட்ட ஆளுதான். 'நெசவாளியா இருந்து, நெசவாளிங்க குறைகளைப் போக்கிட்டுச் சாகணும்'னு அடிக்கடி சொல்லும்.'' - ஒருவர்.

''தெய்வ பக்தியும் நிரம்ப உண்டு. எங்க ஊட்டுக்கு எதுத்தால தெரியற குமரகிரி மலையைப் பார்த்துக் கன்னத்துல போட்டுக்காம அது ஜோலி பார்க்காது. அதனால் தானே எங்களுக்குக் கூட்டுறவு சொஸைட்டியே வந்துச்சி. முன்னையெல்லாம் மாசத்துல பாதி நாள் எங்களுக்கு வேலை இருக்காது. பழைய சொஸைட்டி சுத்த மோசம். நாங்க எல்லாரும் வாழ்க்கையே வெறுத்துட்டோம். சண்முகம்தான் இந்த நிலையை முன்ன நின்னு மாத்திச்சி'' - இன்னொருவர்.

''அதெல்லாம் சரி. இப்படி அவரைக் கண்ட துண்டமா வெட்டினதுக்குக் காரணம் தெரியுமா? அது தான் எனக்கு வேணும். என் விசாரணைக்கு

www.cleanindians.com



உங்க பதில் ரொம்ப உதவியா இருக்கும்.''

''அதாங்க தெரியலை. ஆனா எங்க சொஸைட்டிக்கு எதிரிங்க உண்டு''

''அப்படியின்னா அவங்க யாரு? பயப்படாமச் சொல்லுங்க.''

''இந்தத் தம்பி விஷயத்துல பயமா? அதெல்லாம் கிடையாதுங்க. நெஜமாலுமே எங்களுக்கு முழு விவரம் தெரியாது.''

''அம்மா, நீங்க என்ன சொல்றீங்க?'' அழுது சோர்ந்து விட்டிருந்த சரசுவை நெருங்கினார் இன்ஸ்பெக்டர். அவள் அவரோடு கொஞ்சம் தனித்தாள். பிறகு இதழ்களைப் பிரித்தாள். 'காளி' என்ற ஒருவன் ஐயாயிரம் கொடுக்க வந்ததைச் சொன்னாள்.

அதைத் தன் கணவன் 'லஞ்சம்' என்று வருணித்ததையும் சொன்னாள்.

இன்ஸ்பெக்டர் முகத்தில் இலேசான சந்தோஷப் பரவல்.

'பிரச்னையின் வேர்களில் ஒன்றைப் பிடித்தாகிவிட்டது. இனி இதைப் பிடித்துக் கொண்டே மேலே ஏறலாம்.'

அவர் அடுத்து உம்மாச்சியைப் பார்த்தார். தொளதொளவென்ற அவனது சட்டை, காக்கியால் அடித்துப் போட்டிருந்த அரை டிராயர், சம்மர் கட், சிவந்த கண்கள், முறம் போன்ற காது, வெடித்த உதடு...

''ஆமா, சண்முகம் அடி வாங்கறச்ச நீ இருந்தில்லே?''

''நானும் கூடல்ல கொஞ்சம் அடிபட்டேன்.'' அவன் நடுக்கமாய்ச் சொன்னான். போலீஸ் என்றாலே அவனுக்குத் திராவகம் மாதிரி. 'அடிப்பார்கள், உதைப்பார்கள், ஜெயில், கஞ்சி...' என்ற பயம்.

''அவங்க யார் தெரியுமா?''

''தெரியாது.''

''பொய் சொல்லாதே.''

''நான் எதுக்குப் பொய் சொல்லணும்? எனக்கு சண்முகம் அண்ணன்னா உசுரு. நானும் அதுவும் நந்தவனம் வரை போய்ட்டு, பேசிக்கிட்டுத் திரும்பி வரச்சேதான் ரெயில்வே கேட்டு கிட்ட அவங்க மறிச்சாங்க. ஒருத்தன் 'ஏண்டா... நீ பெரிய ஒழுங்கா'ன்னு அண்ணனைக் கேட்டான்.''

பட்டென்று பேச்சை அத்துடன் நிறுத்தினான் உம்மாச்சி.

''உம், சொல்லுப்பா.''

''என்னாத்தைச் சொல்றது, கண்டபடி திட்டினாங்க. அதெல்லாம் நான் எப்படிச் சொல்றது? இங்கே பொம்பளைங்கல்லாம் இருக்காங்க...''

''அவங்களை அடையாளம் தெரியுமா?''

''நல்லா...'' அந்த 'நல்லா'வில் ஏக அழுத்தம்.

**வா**னம் கறுத்து விட்டிருந்தது. மழை கட்டாயம் வரும் என்னும் ரகத்தில் காற்றில் சிலுசிலுப்பு. இலேசாய் மண் வாசனை கூட.

ராசிபுரத்திலிருந்து வரும் பஸ் தெப்பமாய் நனைந்திருந்தது.

திண்ணையில் திருவட்டமும் கையுமாகவே இருபது வருஷங்களுக்கு மேல் நூல் நூற்றே கழித்துவிட்ட சகுந்தலா சலித்துக் கொண்டாள்.

''ராசிபுரத்துல நல்ல மழை போல இருக்கு. இது என்ன மாசி பங்குனில எல்லாம் மழை பெய்யுது? மனுஷங்கதான் கெட்டுக்கிட்டு வர்றாங்கன்னா காலமுமா?''

''பின்ன எப்படிக் கலிகாலம் முடியறது? நோவும் பிடையும் மனுஷ சரீரத்துக்கு மட்டுமா? காலத்துக்குந்தான். மொதல்ல பருவம் மாறும். அப்புறமா மழையோ, வெயிலோ ஏதோ

www.cleanindians.com



ஒண்ணுமட்டும் அடிக்கும். அப்புறமென்ன பஞ்சமோ, வெள்ளமோ? எல்லாரும் செத்து ஒழிய வேண்டியதுதான்.''

சீதம்மாள் சகுந்தலாவுக்கு இணையாக இடையில் நுழைந்து தானும் சலித்துக் கொண்டாள். வீட்டுக்குள்ளே நெசவுத் தறி நெய்யப்படும் சப்தம் நின்றது.

''ஏண்டா தறி நெய்யலே?'' திண்ணையிலிருந்து உள்ளுக்குள் குரலை ஓட்டினாள் சீதம்மாள்.

''பாவு அறுந்து போவுது பாட்டி. ஈரக்காத்து நூலுக்கு ஒத்துக்கலை. வெயில் வர்ற வரைக்கும் இனி நூலிலோ ஜிம்கானா தான்.'' தறி நெய்து கொண்டிருந்த வாசுதேவன் தனது கவலையைச் சந்தோஷமாக முயன்று அறிவித்தான்.

''நமக்கு மனுஷங்கதான் எதிரின்னா இந்த இயற்கையும் கூடல்ல எதிரியாயிடிச்சி. பாழாப் போன மழை ஏதாவது கிராமம் வயல்னு போய்ப் பெஞ்சா என்ன? இங்க யார் கூப்டா?'' - சகுந்தலா மீண்டும் சலித்துக் கொண்டாள்.

அதைக் கண்டிப்பது போல் இடி இடித்தது. மின்னல் வெட்டியது. சில்லறை நாணயம் வானிலிருந்து தரையில் விழுவதுபோல் மழைப் பொட்டுக்கள் தெறிக்கக் கூரையின் ஓடுகளில் ஒரு வகை ராகதாளம்

''ரெண்டு நாள்ல தறி அறுத்துட்டா கூலி வந்துவிடும். அதைக் கொண்டு சின்னவனுக்குப் பரிட்சைப் பணம் கட்டலாம்னு நெனைச்சேன். எல்லாம் கெட்டுப்போச்சு. இந்த மழை இனி எப்ப நிக்கறது, தறி அறுக்கறது, கூலி எப்ப வாங்கறது?''

சீதம்மாள் சுருண்டே விட்டாள்.

''அதுக்குத்தான் பாட்டி சொன்னேன். இந்த சனியன் பிடிச்ச தொழில் வேண்டாம்னு. எப்ப என்ன ஆகும்னு சொல்ல முடியாது. கஷ்டப் பட்றதுக்குத் தகுந்த கூலியுமில்லே. இதுக்குத் தெரு

மூலையில் உக்காந்து செருப்பு தைக்கலாம்.''

-வாசுதேவனும் அவர்களுக்கு இணையாகச் சபித்துக் கொண்டான். சீதம்மாவும், சகுந்தலாவும் பதில் பேசாமல் அவனை ஏறிட்டனர். முன்பெல்லாம் இப்படி அவன் பேசினால் அவள் அவனைத் திருத்துவாள்.

'வாயை மூட்றா நாய். இந்தத் தொழிலைப் பத்தி உனக்கு என்ன தெரியும்? பரம்பரை பரம்பரையா இந்தத் தொழில்லதாண்டா, நம்ம வம்சம் வளர்ந்துருக்கு. நீ இன்னிக்கு இப்படிச் சரீரத்தைத் தூக்கி விட்டுப் பேசக் காரணமே இதுதான். இது போட்றசோறு' என்பாள். இப்பொழுது அவளும் கூட அவன் கட்சி. காலம் அவளையும் கூட அவன் கட்சியில் சேர்த்து விட்டது என்று தான் சொல்ல வேண்டும். வாசுதேவன் மழை விழும் வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் கணுக்காலிலும் தோள் பட்டையிலும் வலி கூடு கட்டியிருந்தது. கைகளின் பத்து விரலும் நாடாவை இழுத்து இழுத்து மரத்துப் போயிருந்தன. கண்களில் கூட அயர்ச்சி. கொஞ்சம் அசந்து பார்வையை எந்தப் பக்கமாவது திருப்பினாலும், பாவில் ஓர் இழை அறுந்து போனால் அது தெரியாது. வளரும் பட்டு வேட்டியில் ஒரு நூலிழை இடைவெளி கறுக்கென்று தெரியும்.

பஜாரில் அதைக் கொள் முதல் செய்யும் சேட் அதைச் சுட்டிக்காட்டி, முதலில் கை வைத்து விடுவான். சை... அவன் நினைப்பில் தனது தொழில் நிமித்தமான நினைப்புகள் அலுப்பில் தோய்ந்து சலிப்பில் கரைந்து கசப்பில் புரண்டு வெளிப்பட்டன.

'இதற்கொரு முடிவு கட்டியே தீரவேண்டும். இந்தத் தொழிலும் வேண்டாம், இந்தக் கஷ்டமும் வேண்டாம்' அவனுக்குள் தீர்மான முடிச்சுக்கள்

www.cleanindians.com



விழ விழ மழை இலேசாய்த் தனது கடுமையைக் குறைத்துக் கொண்டது.

இப்பொழுது நாலு வீடு தள்ளி இருக்கும் ராஜாராமின் எதிர் வீடு தெரிந்தது. அதன் திண்ணை மேல் குமாரபாளையத்துப் போர்வையில் தன்னை அடக்கிய நிலையில் ரத்தினம் புகையை வெளியே விடாதபடி பீடி புகைத்துக் கொண்டிருந்தான். வாசுதேவனுக்குள் இதைப் பார்க்கக் குஷி கிளம்பி விட்டது. வீதிக்குள் மழையில் பாய்ந்தான். சீதம்மாள் அலறினாள். அது அவன் காதிலேயே விழவில்லை. ரத்தினத்தை எட்டிப் பிடித்து ஆசையாகப் பார்த்தான் வாசு.

''வா, வாசு...கஞ்சாபீடி வேணுமா? இந்தா....''

குறிப்பறிந்து செயல்படும் ஒரு மனிதனாய் நீண்ட அவன் கரத்தில் ஒரு கட்டுப் பீடிகள். ஒன்றை எடுத்து வேகவேகமாய்ப் பற்ற வைத்தான் வாசு. சற்றைக்கெல்லாம் அவன் உடம்பு மழைவானில் நீர்க் கோடுகளைக் கிழித்துக் கொண்டு மிதக்க ஆரம்பித்து விட்டது. உடம்பின் சகல வலிகளிலிருந்தும் விடுதலை கிடைத்துவிட்டது. பேச்சு மூச்சற்ற மௌனம்.

''பட்டையைவிடக் கஞ்சா தாண்டா அதிகம் எனக்குப் பிடிக்குது.'' - நடுவில் வாசுவிடம் கருத்து வேறு. அந்தக் கருத்தைக்கேட்டு ரத்தினம் சிரித்தபோது டக்கென்று அவன் குதிங்காலை ஏதோ ஒன்று வெட்டியது. கொஞ்சம் தடுமாறினான் ரத்தினம். அடுத்து வலத் தோள்பட்டை விண்ணென்று எகிறியது. திரும்பக் குதிங்காலில் ஒரு வெட்டு. தடுமாறி வாசற்படியில் விழுந்தவனை இறுக்க கவ்வியது காக்காய் வலிப்பு

ஒரு நிமிட அவகாசத்தில் துள்ளித்துடித்து நடுவீதிக்கு வந்துவிட்டது அவன் உடம்பு. போதையில் மிதக்கும் வாசு இதை ஒரு வேடிக்கையாகக் கருதிப் பார்க்க, மழையில்

வீதியில் வந்த ஓர் ஆட்டோ ரிக்ஷா மிகச்சரியாக ரத்தினத்தின் கால்மீது ஏறி அவன் கால்களை ரத்தக் கூழாக்கிவிட்டு நிற்காமல் ஓடியது.

ரத்தினம் கத்திய கத்தலில் மழைகூட நின்றுவிட்டது. புத்தகமும் கையுமாய் வீட்டுக்குள் அடைபட்டிருந்த சண்முகம் சப்தம் கேட்டு பதறிப்போய் வீதிக்கு வந்தான். ஓடிப்போய் ரத்தினத்தைத் தூக்கினான்.

மின்னல் வேகத்தில் முதலுதவி, ஆஸ்பத்திரி என்று ஓடியும் உயிரைத்தான் காப்பாற்ற முடிந்தது - வலக்காலை அல்ல

அப்படி இழந்துபோன காலில் ஒரு கட்டையை கட்டிக்கொண்டு 'டொக், டொக்' கென்று தரையில் மோதிச் சப்தம் எழுப்பிக் கொண்டு ஆஸ்பத்திரி வராந்தாவில் அவன் நடந்து வருவது கண்டு எல்லோரும் திரும்பி அவனைப் பார்க்க - இன்ஸ்பெக்டரும் அவனைப் பார்த்தார்.

'இவன் கஞ்சா ரத்தினமாச்சே' - அவருக்குள்ளே நினைப்பின் குமிழ் ஒன்று வெடித்தது. நெருங்கிய அவன் விழியிலும் நீர் கோத்திருந்தது.

''என்னடா, எப்படி இருக்கே?'' - மிரட்டலான தோரணையில் இன்ஸ்பெக்டர் அவனை எதிர்கொண்டார்.

''ஏதோ சண்முகத்தால நல்லா இருக்கேன். பாவிங்க, அவரையும் கொல்லப் பாத்தாங்களாமே?''

''அது இருக்கட்டும். உன் கஞ்சா தொழில் எப்படி இருக்கு?''

''வாய மூடுங்க சார், அந்த சனியனை விட்டொழிச்சு வருஷம் இரண்டாச்சு. எப்ப என் கால் போச்சோ, அப்ப வந்த புத்திசார்.''

மிகுந்த ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தார் இன்ஸ்பெக்டர்.

www.cleanindians.com



இதற்குள் வார்டிலிருந்து வெளிப்பட்டிருந்த ஒரு நர்ஸ் கொஞ்சம் புன்னகை காட்டிச் சூழ்ந்திருந்தவர்களின் இறுக்கத்தைக் குறைத்தாள்.

''கவலைப்படாதீங்க. பிழைச்சுடுவாரு.'' என்றாள்.

காளியைப் பிடிப்பது அத்தனை சிரமமாகப் படவில்லை போலீசாருக்கு. ஏர்க்காடு அடிவாரத்தில் சேர்வராயன் மலை ஏறும்போது மாட்டிக் கொண்டான். லாக்கப்பில் அவன் போலீசார் வசம் நார்நாராகிக் கொண்டிருந்தான்.

''ஐயாயிரம் லஞ்சம் கொடுத்தியாமே... எதுக்குடா?''

''கொடுக்கச் சொன்னாங்க. கொடுத்தேன்.''

''யாருடா?''

''சொல்றதைப் பத்தி இல்ல. சொன்னா உங்களுக்கும் ஆபத்து.''

''என்னடா பொடிபோட்றே, சொல்லுடா?'' லத்தியில் அவன் முட்டியில் ஒரு விளாசலை விட்டபடி கேட்டார் ஒரு போலீஸ்காரர்.

''நம்ம பழைய சேர்மன் ரங்கசாமி!''

அவ்வளவுதான்... போலீசார் முகம் ஒரு மாதிரியாகிவிட்டது.

''நல்லா சொல்லுய்யா, ரங்கசாமியா தரச் சொன்னாரு?''

''வேண்ணா போன் பண்ணிக் கேளுங்க.''

''சரி, எதுக்கு?''

''தெரியாத மாதிரி கேட்டா நான் பதில் சொல்ல முடியாது''

''எங்களுக்கு எப்படிடா தெரியும்?''

''ஆமா, நீங்க அத்தினி பேரும் அரிச்சந்திரன் வீட்டுத்தோட்டத்துல பொறந்த உத்தமனுங்க. உங்களுக்கு ஒன்னுமே தெரியாது.''

''விவரத்தைச் சொல்லாம வியாக்கியானமா

பண்றே?'' திரும்பவும் லத்தியைத் தூக்கினார் போலீஸ்காரர்.

''என்னய்யா பெரிய வியாக்யானம்? அவர் லஞ்சம் கொடுக்கறதும் வாங்கறதும் உங்களுக்குத் தெரியாத ஒரு விஷயமா? எவ்வளவு முடியுமோ அவ்வளவு அடிச்சிருங்க. அப்பத்தான் எனக்கும் நல்லது. நாங்கள்லாம் வவுத்துக்கில்லாததனால இப்படித் தப்பு பண்றோம். சர்க்கார் கிட்ட சம்பளம் வாங்கிக் கிட்டு உங்களை மாதிரி தப்பு பண்ணலே.''

''என்னடா நாங்க தப்பு பண்ணிட்டோம்?'' - கோபத்துடன் இன்ஸ்பெக்டர் ரகுராமன் தம் இடத்தை விட்டு எழுந்து வந்து, கழுத்தில் கையை வைத்து நெரிக்கும் பாவனையில் கேட்டார்.

''அதை நான் வேற சொல்லணுமா? என் தெருவுல பாவாயிங்கற பொம்பளை முப்பது வருஷமாக் கள்ளச் சாராயம் விக்கறா. இது பொறந்த குழந்தைக்கும் தெரியும். உங்களுக்குத் தெரியாதா? ஏன்யா அவளைப் பிடிச்சு அடக்காம இருக்கீங்க? எல்லாம் மாமூல். இது தப்பு இல்லியா? நீங்க எங்களை மிரட்றதா?''

ஏன் அவன் கழுத்தைப் பிடித்தோம் என்றாகிவிட்டது இன்ஸ்பெக்டர் ரகுராமனுக்கு. டெலிபோனைச் சுழற்றினார். மறுமுனையில் ரங்கசாமி.

''குட்மார்னிங் சார்.''

''யார் இன்ஸ்பெக்டரா?''

''ஆமாம். காளி இங்கதான் இருக்கான். என்னசார் விவகாரம்?''

''ஏன் நீங்கதான் போலீசாச்சே, கண்டு பிடிக்க வேண்டியது தானே?''

ரகுராமன் மௌனம் சாதித்தார். ரங்கசாமியே தொடர்ந்தார்.

''காந்தி கூட்டுறவு சொஸைட்டியோட தலைவர்

www.cleanindians.com



சண்முகத்துகிட்ட ஐயாயிரம் நான்தான் கொடுக்கச் சொன்னேன். அவர் சங்க வளர்ச்சிக்காகக் கொடுக்கச் சொன்னேன். இது இடையில் திரிக்கப்பட்டு, இவ்வளவு பெரிசாயிருக்கு. நீங்க பூர்த்து முடிச்சிடுங்க, இல்லேன்னா நான் என் சகலபாடி வரைக்கும் போகவேண்டியிருக்கும். எனக்கு மானம் பெரிசு. நல்லதைச் செஞ்சுட்டுக் கெட்ட பெயர் சம்பாதிச்சுக்க எனக்கொண்ணும் தலையெழுத்து இல்ல இன்ஸ்பெக்டர்.''

ரகுராமன் முகம் கறுத்துவிட்டது.

''சார், அதுகூடப் பரவாயில்லை. சங்கத்தலைவர் சண்முகத்தைக் கண்ட துண்டமா வெட்டிக் கொலைசெய்ய முயற்சி நடந்துருக்கு. காளியும் அதுக்கு உடந்தையா...''

''மன்னிக்கணும். இது அவங்க சொந்த விஷயம். எனக்கெதுவும் தெரியாது. நீங்க காளிகிட்டையே கேட்டுக்குங்க. கூடியமட்டும் விஷயத்தை வளத்தாம முடிக்கப்பாருங்க. சண்முகந்தான் பொழைச்சிட்டார்ல? இன்னும் எதுக்குக் கோர்ட்டு, கேசுன்னு இழுத்துக்கிட்டு? அவருக்கும் சமூகநிலை, சிலரோட பலம் இதெல்லாம் புரிஞ்சிருக்கும். இனி எல்லாம் சரியாயிடும். நீங்க இதுல தலையிடாதீங்க. பாவம், புள்ளை குட்டிக்காரர், பின்னால் நீங்க கஷ்டப்படறதை நான் விரும்பலே.''

பட்டென்று போனை வைத்தார் ரங்கசாமி. அப்படி அவர் போனை முடக்கினால், மிகுந்த கோபத்துடன் நமக்கு எச்சரிக்கை விடுக்கிறார் என்று பொருள். ஆலோசனை தரும் விதமாகப் பேசினால் அது நேரடி ஆணைக்குச் சமம். 'புள்ளை குட்டி, எதிர்காலம்' என்று யதார்த்தமாகச் சுற்றி வளைத்தால் பயங்கர எதிர் விளைவுகள் வரும் என்று பொருள்.

இதெல்லாம் ரகுராமனுக்குத் தெரியும்.

இல்லாவிட்டால் மாறுதல் இல்லாமல் ஐந்து வருஷமாக அந்த ஏரியாவில் அவரால் குப்பை கொட்ட முடியுமா என்ன?

ரகுராமன் போனை வைத்துவிட்டுக் காளியின் பக்கம் வந்தார்.

''அவுத்து விடுங்க சார்.'' அவன் சற்றுத் தெம்பாகப்பேசினான். அவிழ்த்து விட்டார்.

''ஏன்யா ஏதாவது செஞ்சு எங்களைப் போட்டுப் புரட்டி எடுக்கறீங்க?'' சலித்துக் கொண்டார். அவன் ஸ்டேஷனைவிட்டு வெளியேறப் பார்த்தான்.

''ஒரு கையெழுத்துப் போட்டுட்டுப்போங்க சார்.'' போலி மரியாதையோடு ரைட்டர் அவனை இழுக்கவே, அங்கிருந்த ஒரு சாணித்தாள் பேப்பரில் அவனது கைவிரல் ரேகை பதிந்தது.

**து**ரும்பாகத் தென்பட்டான் சண்முகம். முன்பு வலக்கை இருந்த இடத்தில் இப்போது வெறுமை. சரசு அதைப் பார்த்துவிட்டுத் தன் தாயின் மார்பில் முகம் புதைத்து வெடிக்க ஆரம்பித்தாள். உடம்பில் அங்கங்கே கட்டு.

www.cleanindians.com

''ரொம்ப ஜாக்கிரதையா இருந்து கவனிச்சுக்கணும். நிறைய வெட்டுக் காயம் இன்னும் ஆறலே. தண்ணிபடக்கூடாது. ஒரு குழந்தையைப் பாத்துக்கற மாதிரி அவரைப் பார்த்துக்கணும். சத்தான ஆகாரம் ரொம்ப முக்கியம்.''

டாக்டர் பேசப்பேசக் கேட்டுக் கொண்டிருந்தார் சண்முகத்தின் உறவுக்காரர். அவனை ஒரு டாக்சியில் ஏற்றித் திரும்பினர். ஒவ்வொரு வீட்டு வாசலையும் மனித உயிர்கள் ஆக்ரமித்து நிற்க, சண்முகம் இறங்கினான்.

சிலர் ஆரத்திசுற்றித் திருஷ்டி கழித்தனர். எல்லோரையும் பார்த்துக் கனிவாகச் சிரித்தான். மெல்ல நடந்து வீட்டினுள் நுழைந்தான். சுவர்க்



கடிகாரம் 'ணங்' கென்று சப்தித்து வரவேற்புக் கொடுத்தது. மணி இரண்டு. இதேஇரண்டு மணிக்குத்தானே அவன்மேல் கத்திகள் பாய்ந்தன. எதனால்?

**பா**வு நூல் தயாரிப்பவர்களிடமிருந்து சங்கத்துக்குக் 'கொட்டேஷன்' வந்திருந்தன. குறைந்த விலையில் நல்ல தரமான பாவு நூலை சப்ளை செய்பவர் யார் என்று அந்தக் 'கொட்டேஷ' னில் வலை வீசிக் கொண்டிருந்தான் சண்முகம்.

புதியதும், சிறியதுமான அந்த சங்கத்தின் வெளியே ஒரு பட்டு வேட்டிக்காரர் உட்கார்ந்திருந்தார். விரல் மோதிரத்தின் வைரமே அவரது வலுத்த பொருளாதாரத்துக்குச் சான்று பகர்ந்தது.

''ஐயா யாரைப் பார்க்கணும்?''

''உம்... தலைவரை.''

''சண்முகம் அண்ணனையா?''

''அவன்தான் தலைவரா?''

இதைக்கேட்ட உம்மாச்சி முகம் சிவந்தது.

''அண்ணே, இந்த சின்னச் சங்கத்திலே கூட, காசுக்கார மைனர் உங்களைப் பார்க்கணும்னு வெளியே உக்காந்துருக்கான். மிதப்பாய்ப் பேசறான், உள்ள விட்டுமா?''

''நம்ம காரியதரிசியை விட்டுப் பார்க்கச் சொல்லு.'' சண்முகம் இயல்பாகச் சொல்லி விட்டு, 'கொட்டேஷன்'களில் திரும்ப மூழ்கினான்.

ஒரு சிறிய அறை, அதில் எங்கோ ஏலத்தில் எடுத்துப் போடப்பட்ட பழைய மேஜை நாற்காலிகள். தட்டுக் குச்சிகளால் உருவாக்கிய அலமாரிகள். அதில் லெட்ஜர்கள், பேரேடுகள். மேஜை மேல் பளபளப்பான தாமிரத்தட்டுத்தராசு, எடைக்கற்கள்.

தட்டுக்குச்சி அலமாரிகளில் கருமருது மர

பீரோக்களில் நல்ல பட்டு, நார்ப்பட்டு நூல் கட்டுகள்.

சுவரில் காந்தியடிகள், ராமகிருஷ்ண பரம ஹம்சர், விவேகானந்தர் படங்கள். இத்தனைக்கும் நடுவே காரியதரிசி வரதாச்சாரி ஒரு நாற்காலியில். வயதான மனிதர்.

''வாங்க சார், யார் நீங்க? என்ன வேணும்?'' - மிகக் கனிவான அங்கீகரிப்பு. அவரிடம் அங்கீகரிப்போடு உள்ளே நுழைந்த பட்டுவேட்டிக்காரர் சங்கத்தின் வித்தியாசமான சூழ்நிலையைப் பார்த்துக் கொஞ்சம் ஆச்சரியப்பட்டார்.

தமது பளபளப்பான ஏ.சி. வசதி கொண்ட சங்கம் எங்கே? இது எங்கே?

''என்ன பாக்கறீங்க?'' - வரதாச்சாரி.

''ஒண்ணுமில்ல, இது சொஸைட்டியா இல்லை, ஏதாச்சும் தட்டுமுட்டுச் சாமான் விக்கற கடையான்னு பாக்கறேன்.''

வரதாச்சாரியின் தன்மானத்தின்மேல் ஒரு மெல்லிய கீறல், சமாளித்துக் கொண்டார்.

''தட்டுமுட்டுச் சாமான் விக்கற கடை சொஸைட்டியாகலாம். ஆனா சொசைட்டிதான் தட்டுமுட்டுச் சாமான் விக்கற கடை ஆகிடக் கூடாது.'' பட்டுவேட்டிக்காரருக்குக் கொஞ்சம் உதைப்பு. இருந்தும் தொடர்ந்தார்.

www.cleanindians.com

''நான் பக்கத்துச் சங்கத்தின் காரியதரிசி.''

''தெரியும்.''

''அப்ப யார் என்னன்னு கேட்டீங்களே?''

''என்ன பண்றது, உங்க ஆரம்பம் அப்படி.''

''சரி, விஷயத்துக்கு வரேன். இந்த உலகத்துலேயே உங்க கூட்டுறவு சொஸைட்டி தான் உத்தமமான சொஸைட்டி மாதிரியும், மத்த சொஸைட்டியெல்லாம் மோசம்கிற மாதிரியும் நீங்க பேசறதா கேள்விப்பட்டேன்.''

''நாங்கன்னா, நானா?''



''உங்க மெம்பருங்க.''

''நிச்சயமா இருக்காது. உங்க மெம்பருங்க தான் அப்படிச் சொல்லியிருக்கணும், ஏன்னா அவங்களை அந்த நிலையில் நீங்க வெச்சிருக்கீங்க. அவங்க பேச்சு பொறுக்காம எங்களைக் கடிக்க வந்திருக்கீங்க, சரிதானே?''

''பொய், அப்படி என்ன பெரிய சாதனை செஞ்சுட்டீங்க நீங்க?''

''சாதனைங்கற பெரிய வார்த்தையைத் தயவுசெய்து பயன்படுத்தாதீங்க, இப்பத்தான் நாங்க பிறந்து தவழ ஆரம்பிச்சிருக்கோம். கூடிய சீக்கிரம் நீங்க சொன்ன சாதனையைச் செய்வோம்.''

''நல்லாச் செய்யுங்க, வேண்டாங்கலே. ஆனா அது சாத்தியம் தானான்னு யோசிக்கணும். சொஸைட்டிய சேர்ந்தவங்கங்கற முறையில் நாமெல்லாம் ஒரு ஜாதி. இப்படி முன்ன பின்ன இருக்கக் கூடாது.''

''உங்க மாதிரி நாங்களும் லஞ்சம் வாங்கி, ஊழல் பண்ணலே.''

''நீங்க தப்பாப் புரிஞ்சுகிட்டுப் பேசறீங்க, சொஸைட்டின்னாலே சேவைன்னு தான் அர்த்தம். இதுல அதெல்லாம் நுழைஞ்சிட்டா அப்புறம் அது சொஸைட்டி இல்லே.''

''நீங்க நல்லாப் பேசமட்டும் செய்வீங்கன்னு எனக்குத் தெரியும். ஏன்னா நானும் உங்க சொஸைட்டியோட பழைய மெம்பர் தானே''

''அது கிடக்கட்டும். நீங்க எங்க சொஸைட்டியோட ஒத்துப் போகணும். அநுபவத்துல மூத்த எங்க சொஸைட்டி பாவு நூல் வாங்கற இடத்துல நீங்களும் கொட்டேஷன் வாங்கிச் சரக்கு வாங்கணும். இதை நீங்க ஒப்புத்துக்க மாட்டீங்க. அப்படி இல்லையன்னா பதில் விளைவு நல்லா இருக்காது. அதோட எங்க சொஸைட்டி

மெம்பருங்க விலகி உங்க சொஸைட்டிக்கு வந்தா சேர்த்துக்கக் கூடாது.''

''நீங்க ஒழுங்கா இருந்தா, அவங்க ஏன் விலகறாங்க?''

''என்ன, நாங்களா ஒழுங்கா இல்லை? கணக்கு வழக்கை யார் வேணா எப்ப வேணா வந்து சோதனை பண்ணிக்கலாம். புது பவுசுல நீங்க மகாத்மா மாதிரி பேசறீங்க. ஆயிரம் பேரைக் கொலை பண்ணிட்டுக் கோர்ட்ல நிரபராதின்னு தீர்ப்பு வாங்கற சக்தி எங்க கிட்ட இருக்கு. தெளிவுகளிவா நடந்துக்குங்க. நீங்க என்னதான் 'சேவை, சேவை' என்று மாஞ்சாலும் இவங்க நடுவுல நல்ல பெயர் மிஞ்சாது. கடைசியில உங்களையும் ஊழல் பண்ணிட்டதாச் சொல்லு வான். ஏழைக் குடும்பைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும். அவங்களுக்குத் தேவை தொடர்ச்சியா வேலை, கூலி... அதுக்குத்தான் சொஸைட்டி. இடையில் பாவு நூல் தயாரிக்கிற மொதலாளிங்க, தங்ககிட்ட ரொக்கமாப் பாவு வாங்கறதுக்காக அன்பளிப்பா ரூவா தந்தா, அதை வாங்கறதுல என்னா தப்பு? யோசிங்க. கொள் முதல் சரக்கை நம்ப தனிப்பட்ட திறமையினால வெளிநாட்டுல ஆர்டர் பிடிச்சு விக்கறோம். அதுக்குக் கமிஷன் எடுத்துக்கறோம். இதுலேயும் என்ன தப்பு? இங்க பேசின பேச்சு ரகசியமா இருக்கட்டும்.''

''சேவை சேவைன்னு சொல்லிட்டுக் கமிஷன், அன்பளிப்புன்னு வாங்கி, இதைக்கொண்டு உங்க வாழ்க்கையை வளப்படுத்திக்கிறதெல்லாம் தப்பு கிடையாதா? உங்க அகராதியில கொலை கொள்ளை இதுக்கெல்லாம் என்ன அந்தஸ்து கொடுத்திருக்கீங்க?''

''விதண்டாவாதம் எங்ககிட்ட வேண்டாம். உங்களை மாதிரி ஆயிரம் பேரைப் பார்த்துருப்போம். பீஸ் பீஸாக்கி விடுவோம்



ஜாக்கிரதை''

பட்டுவேட்டிக்காரர் கடுப்புடன் எழுந்து போய்விட்டார். வரதாச்சாரிக்குக் கொஞ்சம் சுருக்கென்று ஆனது. மிகத் தள்ளாத வயதில் வைகுண்ட பிராப்திக்காக அலை மோதிக் கொண்டிருக்கும் சமூகப் பெரியவர் அண்ணா சாமியிடன் சென்று, 'அண்ணா, நாங்கள்ளாம் ஒண்ணாச் சேந்து அரசாங்க உதவியோட கூட்டுறவு சொஸைட்டி ஆரம்பிக்கப்போறோம். நீங்க மகாத்மா காந்தியுடன் பழகினவர், நீங்கதான் வழி நடத்தணும்' என்று காலில் விழுந்தபோது, 'முதல் ஒரு வருஷம் ஒத்துமையா எந்த வில்லங்கமும் இல்லாம சொஸைட்டிய நடத்தி முடிச்சுட்டு வாங்க, நான் கருத்து சொல்றேன்' என்று அவர் பூடகமாய்ப் பேசியதன் பொருள் இப்பொழுது புரிந்தது. அப்படியே சண்முகத்தின் அறைக்குள் நுழைந்தார்.

''சண்முகம்...!''

''என்ன அண்ணே?''

''நமக்குப் பிரச்னை ஆரம்பமாயிடிச்சுப்பா.''

''உம்மாச்சி சொன்னானே, யாரோ ஒருத்தன் வந்தான்னு. அவனாலயா?''

''ஆமாப்பா. பக்கத்து சொஸைட்டி செகரட்டரி தாம்ப்பா அந்த ஆளு. ஆலோசனை சொல்ற ரகத்துல மிரட்டிட்டுப் போயிருக்கான். நமக்கும் சமூக நடைமுறை தெரியும். என்ன செய்யறது?''

''வயசுல பெரியவங்க நீங்களே இப்படிப் பயப்படலாமா? தினம் தினம் செத்துப் பிழைச்சு கிட்டிருந்தோம். இப்பதான் ஒத்துமையினால ஏதோ நிம்மதியா மூச்சு விட்றோம். இதுக்கு ஒரு பங்கம் வந்தா நம்ம மூச்சேகூட நின்னுடட்டும். ஆனா பழைய அந்த வாழ்க்கை மட்டும் வேண்டாம்.''

சண்முகத்தின் தீர்க்கம் வரதாச்சாரிக்கே ஆச்சரியமாக இருந்தது. அவன் சொல்வதும்

www.deeanindians.com

வாஸ்தவந்தான். பழைய அந்த வாழ்க்கை வேண்டவே வேண்டாம்.

மனசு மறுதலிக்கும் போது, நினைப்பு பழைய வாழ்க்கைக்குள் புகுந்து மலேரியாப் புழுக்கள் மழை நீரில் நெளிவதுபோல் நெளியத் தொடங்கி விட்டது.

முப்பத்தைந்து வருஷமாகப் பட்டு நெய்கிறான் ராகவன்.

நல்லபட்டு, நார்ப்பட்டு, பாரீஸ் பட்டு என்று அந்த வகையில் அவன் பார்க்காத தினுசுகள் இல்லை. மொரமொரப்பான இழையிலிருந்து மிக மிருதுவான இழை வரை சகலத்தையும் தொட்டுப் பார்க்காமல் பார்வையாலேயே தரம் பிரித்து விடுவான்.

அதிகாலை நான்கு மணிக்குத் தறியில் ஏறி உட்கார்ந்தால் அன்றைய இரவு வரை அவன் காலும் கையும் ஓய்ந்ததேயில்லை. சராசரி பதினான்கு மணிநேர உழைப்பு.

இருபதிலிருந்து இருபத்தைந்து ரூபாய்க்குள் கூலி தேறும். இந்தக் கூலிக்காக அவனது மனைவி பட்டம்மாளும், மகள் மங்களாம்பிகாவும் உதவுவார்கள். ஒருத்தி திருவட்டம் சுற்றிப் பட்டு நூல் கட்டை செம்மைப்படுத்துவாள்.

இன்னொருத்தி அதை ராட்டை உதவியுடன் கெண்டைகளில் பிடிப்பாள். சொர சொரப்பான சாணி மெழுகிய திண்ணையில் இத்தனை சப்தத் துக்கும் நடுவில், படிப்பில் மனம் ஒன்றமுடியாமல் அலைமோதுவான் அவர்கள் மகன் கோபி.

வீடு அமைதியாக இருந்தால் வயிறு அமைதி யாக இருக்க முடியாது என்பது அவனுக்குத் தெரியும். எனவே சப்தத்துக்கு நடுவிலேயே கணக்கையும், விஞ்ஞானத்தையும் மூளைக்குள் போட்டுத் திணிப்பான்.



நடுநடுவே அப்பனின் அழைப்புக்கு ஏற்ப பாவுக்குக் கஞ்சி போடவேண்டும், அள்ளு நீட்டும்போது இழைகளைப் பிரித்துவிட்டு உலர்த்த ஒத்தாசிக்க வேண்டும், நடுவீதியில் குதிரை மரம் நடுவது, கடப்பாரை பதிப்பது - கயிறு கொண்டு இழுத்துக் கட்டுவது - ஈச்சங்குச்சியால் நீண்டு நிமிர்ந்து நிற்கும் பாவின் மேல் 'விர்ர் விர்ர்' என்று விளாசுவது - இத்தனைக்குமாய் ஓடவேண்டும்.

இதனால் படிப்பில் மந்தமாகிவிட்டான். கணக்கு, வரலாறு, தமிழ் என்று அனைத்திலும் 'முப்பது, நாற்பது' என்று அவன் மார்க்குகளை வாங்கி வந்து நின்றபோது, ராகவனுக்கு அவன் எதனால் அத்தனை குறைந்த மார்க்கு வாங்கினான் என்பது புரியாமல்போய், எப்படி இப்படிக் குறைந்த மார்க்கு வாங்கலாம் என்ற ஆத்திரம் மட்டுமே பெருகியது.

பாவை விளாசும் ஈச்சங்குச்சியால் அவன் முதுகைத் துவம்சம் பண்ணிவிட்டான்.

''நீயாச்சும் நல்லா படிச்சு, நாசம் பிடிச்ச இந்தத் தொழிலவிட்டு வெளியேறி முன்னுக்கு வருவேன்னு நெனைச்சேன். நீயும் வெளங்காமப் போயிட்டே. இது நம்ம சாபக்கேடுடா, சாபக் கேடு'' என்று திட்டி, தெருமுனையில் ராமதாசின் டீக்கடையில் மாதம் இருபது ரூபாய் சம்பளத்துக்கு கிளாஸ் கழுவ அனுப்பி விட்டான்.

டீ குடிக்கப் போகும் சண்முகத்துக்கு அங்கே கோபியைப் பார்க்கச் சப்பென்று ஆகிவிட்டது. சில நாட்களில் கோபியே டிரவுசர்பாக்கெட்டுக்குள் சாராய பாட்டிலோடு பாவாயியின் ஏஜெண்டாக அலைந்தபோது சண்முகத்தின் நரம்பே அறுந்து விட்டது.

''டேய், ஏண்டா இப்படிக் கெட்டழியறே?''

''ராமதாஸ் கடையில் கிளாஸ் கழுவுனா இருபது ரூவாதான் சம்பளம். பாவாயி, சாராயம் வித்துத்

www.cleanindians.com

தந்தா நூறு ரூவா தரேன்னா, அதான்...''

ராகவனைப் பார்த்துச் சண்முகம் கத்தினான். ''ஏ ராகவா, உன் பையனை நீயே கெடுத்துக் குட்டிச்சுவராக்கிடுவே போல இருக்கே. என்னப்பா இதெல்லாம்?''

''என்ன செய்யச் சொல்றே சண்முகம்? பள்ளிக்கூடம் அனுப்பினேன், படிப்பு ஏறமாட்டேங்குது. நெசவு நெய்யலாம்னா காலும் கையும் தறியில எட்டவேணாமா? கொஞ்ச நாளைக்கு இப்படியே இருக்கட்டும்.''

''அவன் சும்மாவாச்சம் இருக்கட்டும். இந்த சாராய சமாச்சாரமெல்லாம் வேண்டாம்பா.''

''இந்தக் காலத்துல ஒரு பத்து வயசுப் பையனுக்கு யார் நூறு ரூவா சம்பளம் தர்றா? நீ போய் வேலையப்பாரு. நான் தறிக்குப் போய் ஒரு வாரம் ஆச்சு. சொஸைட்டியில் இன்னும் பாவு தரலே, கேட்டா பாவுவரலே, நூல் வரலே, கொள்முதல் சரக்கே விற்கலேங்கறாங்க. என்னா பண்ணச் சொல்றே? நாங்க சாப்பிட வேண்டாமா?''

''அவங்க பொய் சொல்றாங்க.''

''தெரியும், யார் கேக்க இருக்கா?''

''நீங்கதான்.''

''ஏன், நாங்க கை காலோட நல்லா இருக்கிறது புடிக்கலையா? தனியா நின்னு சிலர் வேணும்னா முண்டா சுத்தறாங்க. ஆனா சேரச் சொன்னா ஒரு பய சேரமாட்டான். எதுக்குப்பா ஊர் வம்பு நமக்கு?''

ராகவன் உள்ளே போய்விட்டான். இந்த 'எதுக்குப்பா ஊர் வம்பு நமக்கு?' என்ற வார்த்தை மட்டும் அன்று வீதியில் எல்லோராலும் உச்சரிக்கப் பட்டது.

திடும்மென்று ஓர் இடி, வீதியின் மைய வீட்டு மல்லிகா, தூக்கில் தொங்குவதாக!

www.chennaiindians.com



ஓடிப் போய்ப் பார்த்ததில்...

''பட்டுச் சீலை வேணும், பட்டுச் சீலை வேணும்னு தினமும் அனத்தினா. 'ஏன் வெறும் சீலை கட்டுனா இடுப்புல நிக்காதோ'ன்னாரு இவ அப்பா. அவ கேக்கலே. வாய் வார்த்தை முத்தி உசுரை மாய்ச்சுக்கற அளவுக்குப் போயிடிச்சு.''

தாய்க்காரியின் சோக ஆலாபனை கூட்டத்தையே உலுக்கியது. ''பட்டுலையே பொரள்றீங்க, ஒரு சீலை நெஞ்சு தர முடியலையா?''-சண்முகம்.

''ஐம்பது ரூபா கடனை அடைக்கவே எங்களுக்கு வக்கக் காணோம். அது வட்டி குட்டி போட்டு இன்னிக்கு ஐநூறு ரூபாயா ஆகியிருக்குதுப்பா. எங்களுக்குப் பட்டுச் சீலை இல்லேன்னு தான் அழுவுதா? பொச கெட்ட பிண்டம் பளபளப்புக்கு ஆசைப்பட இவ என்ன மிட்டா மிராசா? தட்டிக் கேட்டா தூக்கு மாட்டிக்கிட்டுப் பெத்தவங்களை இப்படிக் கதற உட்றதா?''

வினாக்களா... இல்லை, அம்புகளா இவை? சண்முகம் நொறுங்கிப் போய்த் திரும்பினான். ஒவ்வொரு வீட்டுக்கும் இப்படி நூறு நூறு சோகக்கதை.

சே... என்ன வாழ்க்கை இது?

வீட்டுத் திண்ணையில் மல்லாந்துகொண்டு அரை நிலாவைப் பார்த்தபடி அவன் மனசு அழ ஆரம்பித்தது.

விடிந்தால் கல்லூரிப் பரீட்சை. உதய வேளைக்கு முன் எழுந்து படிப்பில் மனத்தை ஓடவிட்டால் மனம் ஒன்றுவேனா என்றது. பரீட்சை பீஸ் கட்ட தனது தாய் கல்யாணப் பட்டுச் சேலையை அடகு வைத்துக் காசு வாங்கிய நிஜம் ஒரு பக்கம் நெஞ்சைச் சுட்டது.

இதெல்லாம் எதனால்? இதெல்லாம் எதனால்? யோசிக்கும் அறிவிருந்தும் விமோசனங்கள் ஏன்

பிறக்கவில்லை?

ஒரு வழியாகப் பரீட்சைகள் முடிந்துவிட்டன.

காலத்தை வெட்டியாக்காமல், அப்ளிகேஷன்களை எழுதிப் போட்டுவிட்டு ஆர்டருக்காகத் தபால்காரரை எதிர்நோக்கிக் காத்திராமல் குலத்தொழிலான நெசவு நெய்தால் தேவலை என்று சண்முகத்துக்கு. தாயிடம் சொன்னான்.

''நீ ஒண்ணும் நெசவு நெய்யவேண்டாம். பட்டம் படிச்சது எதுக்கு? இந்தப் பாழாப் போன தொழிலைச் செய்யவா? இந்தக் கஷ்டம் எங்களோட போகட்டும். நீ சும்மா இரு. அரசாங்க உத்தியோகம் கிடைச்சுடும் தானே?''

அவள் பரிகாசம், சலிப்பு, எதிர்பார்ப்பு எல்லாவற்றையும் கலந்து தாளித்தாள்.

''வேலை வரும்போது வரட்டும். அது வரை நீ நெசவு நெஞ்சு கஷ்டப்பட்றதை நான் சகிச்சுக்க முடியாது. நானும் நெசவுக்குப் போறேன்.'' என்று சொல்லிவிட்டு நெசவு நெய்யப் போனான். சொந்தத்தில் தறி போட்டு நெய்யவேண்டும் என்றால் குறைந்தபட்சம் இரண்டாயிரம் வேண்டும். அதுவும் மீனும் என்று சொல்வதற்கில்லை. மார்க்கெட் நிலவரம் கொஞ்சம் டல்லடித்தால் கடைசியில் ஒருவர் நல்ல விலைக்குச் சரக்கைத் தீண்டமாட்டார்கள். அதற்கு வழியும் இல்லை.

www.cleanindians.com

கூலித்தறி தான் உசிதம்.

நெசவுத் திண்ணை வாடகையிலிருந்து, காலத்துக்கும் கணக்கு போட்டுக் கூலித் தறி நெய்யப் புகுந்தான். நாள் முழுக்க 12 மணி நேர வேலை.

எட்டு ரூபாய் கூலி தந்தார் முதலாளி. அவருக்கோ படுலாபம்.

''என்னங்க இது, அநியாயம்?'' கேள்வி



கேட்டான்.

''நீ படிச்சவன் பாரு. அப்படித்தான் கேள்விகேப்பே. போய் வேற வேலையப் பாரு. உனக்கு யாரு ஆயிரம் ரெண்டாயிரம் தர்றாங்கன்னு பாப்பம்.'' வெளியேற்றவும் செய்தார்.

உழைப்புக்கேற்ற ஊதியம் கிடையாது. உழைக்காமல் இருக்கவும் முடியாது. என்னதான் செய்வது? எப்படித்தான் பிழைப்பது?

மனசு மன்றாடியது. காலண்டரில் தொங்கிய காந்தியும் நேருவும் அவனைப் பார்த்துச் சிரித்தார்கள்.

'எல்லாத்துக்கும் நீங்க வாங்கித் தந்த சுதந்தரந்தான் காரணமோ?' - அவனுக்குள்ளே கடூரமான கேள்வி ஜனித்தது. விடை தெரியாமல் வீதிக்கு வந்தபோது ஒரு சொஸைட்டி கட்டிடத்தின் வெளியே ஏதோ ரகளை!

என்னவாம்?

எட்டி விசாரித்ததில் அவன் சோகம் இரண்டாகத் தன்னைப் பெருக்கிக் கொண்டது.

''ஈரப் பட்டை கொடுத்து ஏமாத்திட்டாங்க. இவர் வாங்கிட்டுப் போகும்போது எடை ஐநூறு கிராம் இருந்திச்சு. ஈரம் காய்ஞ்சிடவும் நூறு கிராம் குறைஞ்சுபோச்சு. அந்த நூறு கிராமுக்கு இவர் எங்க போவாரு? இன்னிக்கிப் பொழுது ஒரு கிராம் பட்டு என்ன விலை தெரியுமா? இவனே கூலிக்காரன், எங்கபோவான்? நியாயம் கேட்டா, 'நீ ஏன் காயவெச்சு எடுத்துக்கிட்டுப் போகலே'ன்னு சண்டைக்கு வர்றாங்க.''

சண்முகத்தின் பார்வை பட்டு நூலும் கையுமாக நிற்கும் அவர் பக்கம் திரும்பியது.

கண்களில் பீதியுடன் அதனூடே கண்ணீர் துளும்பத் தள்ளாத வயதில் விக்கி அழுது கொண்டிருந்தார்.

''கார்ல வர்றாங்க, கார்ல போறாங்க. என்

வவுத்துல போய் அடிச்சிட்டாங்களே? இது சொஸைட்டியா, கொள்ளையடிக்கற இடமா?'' அவர் கேவினார்.

''ஏ கெழவா, அதிகம் பேசினே ஒழுங்கா வீட்டுக்குப் போக மாட்டே'' நடுவில் ஒரு மிரட்டல் வேறு. சண்முகம் எழுந்தே விட்டான். மறுநாளே சொஸைட்டியை அரசாங்க ஒத்துழைப்போடு மேற்பார்வையிடும் கைத்தறி டைரக்டருக்கு மனு எழுதிப் போட்டான்.

பதினைந்து நாள் கழித்துப் பதில் வந்தது, 'உங்கள் மனு பரிசீலிக்கப்படும்' என்று. இந்தத் தாமதம் அவன் எதிர்பார்த்ததுதான். திரும்ப ஒரு மாதம் கழித்து ஒரு கடிதம் வந்தது, 'உங்கள் குற்றச் சாட்டுக்கள் ஆதாரமற்றவை' என்று.

நடுவில் யாரோ சிலர் வந்து சண்முகத்தை மிரட்டி விட்டுப் போனார்கள்.

'நீ தான் சண்முகமா? ஜாக்கிரதை, பீஸ் பீஸாயிடுவே ஆபீசருக்குப் பெட்டிசன் எழுதிப்போட்றியாமுல்ல, மூட்டு எலும்பை எண்ணிப்பிடுவம்.'

வாழ்க்கையில் ஒரு கசப்பின் எல்லைக்கே வந்து அவன் திண்ணையில் விழுந்த சமயம் - வீட்டுக்குள் வேதனையுடன் திமிசை மிதித்துத் தறியை நெய்து கொண்டிருந்தாள் அவன் அம்மா பார்வதி.

''டேய், ரொம்பக் கவலைப்படாதேடா. என்னால தாங்கிக்க முடியாது.'' குரலை மட்டும் அனுப்பித் தேறுதல் சொன்னாள்.

''அக்கா புடவை முடிஞ்சிச்சா? அடுத்து சிகப்புக் கலர் பாவாப் போட்டுச் சிகப்பு கலர் புடவை நெஞ்சு தாக்கா. மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி கோவில் பிரார்த்தனைக் கமிட்டிக் காரங்களுக்கு குங்கும நிறத்துல சேலை வேணுமாம். நல்லா இருக்கணுமாம்.''

பக்கத்து வீட்டுப் பெண் நாடா கெண்டைகளை

www.cleanindians.com



அவனுக்குப் பக்கத்தில் வைத்து விட்டுப் பேசவும் பார்வதிக்கு நெஞ்சைக் கறித்தது. சுருக் சுருக்கென்று வலி திடுமென்று வந்து தாக்கியது. விநாடியில் ரத்தம் வாயில் பெருக்கெடுக்க, வயிறோடு ஒட்டிக்கிடக்கும் நீண்ட தறியின் வெள்ளைப் புடவையைச் சிவப்பாக்கிப் பக்கத்து வீட்டுப் பெண்ணின் ஆசையை உடனே ஈடேற்றியது. பார்வதி ஓயாத தன் உழைப்புக்கும் வாழ்க்கைக்கும் ஒரு முடிவு கட்டி விட்டுச் சவமானாள்.

ஓடி வந்த சண்முகம் அலறிய அலறலில் ஒட்டு வில்லைகள் எல்லாம் கழன்றுவிட்டன.

''பொம்பளைங்கல்லாம் ஜாக்கிரதை, எவனோ சாமியார்ப் பய வந்துருக்கான். ஆளைப் பார்த்தாலே திருட்டு முழி. இந்தக் காலத்துல வேலை செஞ்சு பிழைக்க வக்கில்லேன்னா இப்படி ஒரு வழி. எல்லாம் நம்ம நாட்டுலதாம்ப்பா இப்படி. மேல் நாட்டுல்லாம்...''

டீக் கடை ஒன்றில் அச்சுப் பிணைக்கும் அம்புலி டீயை ஊதி ஊதிச் சூப்பும்போது படு பந்தாவாய்ச் சலித்துக் கொண்டான்.

''ஐயா எந்தெந்த மேல் நாட்டுக்கெல்லாம் போயிருக்காப்பல?'' என்றான் பக்கத்துத் தோழன் பலராம்.

''போனாத்தான் தெரியணுமா? எத்தனை சினிமாவுல பார்க்கறோம்? யாருடா இவன், விலாசம் கெட்ட வெட்டிப்பய.''

''ஊய்... பார்க்கற சாமியாரையெல்லாம் போலிப்பட்டியல்ல சேத்திப் புடாதப்பா. நல்லவங்களும் அதுல உண்டு. இங்க வந்துருக்கிற ஆனந்தர் ஒரு கோடீஸ்வரனாம். ஊரை ஏமாத்திப் பிழைக்க வேண்டிய அவசியம் அவருக்கு இல்லே.''

''இதெப்படி உனக்குத் தெரியும்? ஏதாச்சும் பணம் கொடுத்து இப்படி சொல்லச் சொன்னானா அந்த சாமியார்ப் பய.''

''உன் நாக்கு நல்லா இருக்கறது உனக்குப் புடிக்கலையா? ஏண்டா, இப்படித் தப்பா பேசறே? இப்படி அவநம்பிக்கையா பேசற பேச்சுக்குப் பகுத்தறிவுங்கற பட்டம் வேற. நம்ம மதத்துல நமக்கு அளவுக்கு மீறிச் சுதந்தரம் கொடுத்துட்டாங்க. அதான் இப்படி நல்லது கெட்டது எல்லாத்தையும் தரம் பிரிக்கத் தெரியாம இஷ்டத்துக்குப் பேசிட்றோம். நம்மளை நாமளே ஏமாத்திக்கற இந்தக் கொடுமை ஒழியணும்பா. அப்பத்தான் நாடு உருப்படும்.''

''நாடு உருப்பட்றது அப்புறம் இருக்கட்டும். நீ முதல்ல உருப்பட்ற வழியப்பாரு.''

டீக்கடை என்றாலே நாலாவித சம்பாஷணைகள் தான். சண்முகத்தின் உற்சாகம் இழந்துவிட்ட செவிகளிலும் அவை விழாமல் இல்லை. இந்த மாதிரியான அவநம்பிக்கை விமரிசனங்கள் 'ஆனந்தர்' என்ற அந்தச் சந்நியாசியின் காதுக்கும் போனது. சிரிக்க மட்டும் செய்தாராம்

-சண்முகம் எதிர்பாராமல் அவரைப் பார்த்த போது அவர் உண்மையானவரா, போலியானவரா என்பதை அறிய முனைந்தான்.

''ஆமாம், இவ்ளோ திட்றாங்களே, உங்களுக்குக் கோபம் வர்லியா?'' - கேட்டான். ஆனந்தர் மறுபடியும் சிரித்தார். 'முற்றும் துறந்துவிட்ட 'வனிடம் கோபம் மட்டும் எப்படி இருக்கும்?' சிரிப்பிலேயே கேட்டார்.

''சாதாரண மனுஷன் உணர்ச்சிகளுக்கு அடிமை. எவன் உணர்ச்சிகளை ஆட்டிப் படைக்கிறானோ அந்த உணர்ச்சிகள் அவனுக்கு அடிமை. நான் இரண்டாவது ரகம். இதெல்லாம் நான் எதிர்பார்த்ததுதான். இது தவிர்க்க முடியாத

www.cleanindians.com



காலகட்டம். சந்திச்சுத்தான் தீரணும். என் தூய்மையிலேயும், தவத்திலேயும் எனக்கு நம்பிக்கையிருக்கு அதனால எந்த அவ நம்பிக்கையாளரும் என்னை எதுவும் செய்ய முடியாது. காலப் போக்குல உண்மையை எல்லாரும் புரிஞ்சிப்பாங்க.''

அவர் சொன்னபடியே காலப் போக்கு அவர் பற்றிய அபிப்பிராயத்தில் மாறுதல்களைச் செய்ய, சண்முகம் அவருக்கு மிகவும் வேண்டியவனாக மாறிவிட்டான்.

ஒரு நாள் தன் மனத்துயரங்களைச் சுட்டிக்காட்டி இதற்கு வழி என்ன என்று கேட்டான். சமத்து வத்துக்கு வழி கேட்ட அவனைப் புன்னகையுடன் பார்த்தார் சாமியார்.

''என் குருநாதர் விவேகானந்தர் பற்றி உனக்குத் தெரியுமா?'' - கேட்டார்.

''கொஞ்சம், கொஞ்சம்...''

''நல்லா தெரிஞ்சுக்கோ, அவரால தான் நான் இப்படி ஆனேன். என் கருத்தெல்லாம் அவர் போட்ட பிச்சை. சுருக்கமாச் சொல்றேன் புரிஞ் சுக்கோ. இன்றைய சமுதாயத்துல இளைஞர்கள் ஒரு புது மாற்றத்தை எதிர்பார்க்கறது வாஸ்த வந்தான். லஞ்ச ஊழல் இல்லாத சமதர்மம் மிகுந்த அந்த மாற்றம் ஒரு சாதாரண விஷயம் அல்ல. இந்த உலகத்துல எதையுமே ஒன்றை இழக்காமப் பெற முடியாது. அந்த நல்ல சமுதாய மாற்றம் வேணுமின்னா இளைஞர்கள் தியாகங்களுக்குத் தயாராகணும். தியாகம்னா அதுல எல்லாம் அடக்கம். காந்தியடிகளோட சேர்ந்து லட்சக் கணக்கான பேர் போராடினதாலயும், கஷ்டப்பட்ட தனாலயும் தான் சுதந்தரம் கிடைச்சது. சும்மா கிடைக்கலே. அதுபோல ஒரு புனிதப் போர் உங்களால நடந்தா அந்தச் சுதந்தரம் பேரில் படிஞ்சிருக்கற அழுக்கு நீங்கிடும். சுயநலத்தை

விட்டு வெளிய வாங்க. எதற்கும் துணியுங்க. சத்தியமும், தர்மமும் பெரிசுன்னு நினைங்க. தப்புக்குத் துணை போகாதீங்க. லஞ்சம் வாங்கற இடத்துல, அதைக் கொடுக்கற குற்றந்தான் பெரிசு. கொலை நடக்கற இடத்துல அதைச் சந்திக்கற கோழைத்தனம் தான் பெரிசு. திரும்பவும் சொல்றேன். நல்ல விளைவுகளைத் தியாகம் செஞ்சுதான் பெறமுடியும். ஒன்றை இழக்காம இன்னொன்றைப் பெற முடியாது. இழக்கற பொருளுக்கு ஈடாகத்தான் கிடைக்கற பொருளும் இருக்கும். இது ஒரு சமுதாய வேள்வி. இதுல உயிர்த்தியாகம், பொருள்தியாகம் செய்யப்போகிற யாகப் பசு யார்? ஆறிலயும் சாவு, நூறிலயும் சாவு. இவ்வளவு விசனப்பட்ற நீயே ஏன் துணியக் கூடாது சண்முகம்?''

நீளமாக ஆனந்தர் பேசினாலும் அதுதான் எத்தனை பொருள் செறிந்த பேச்சு! சண்முகத்தின் துவண்ட மனத்தில் ஒரு புதிய புனலே ஓடத் தொடங்கியது.

அந்த விநாடியே பயத்தைத் தூக்கி எறிந்தான். இது எப்படி முடிந்தது? அவனாலேயே நம்ப முடியவில்லை. 'ஒன்றை இழக்காமல் இன்னொன்றைப் பெற முடியாது,'

உட்கார்ந்தால், உறங்கினால், நிமிர்ந்தால், நடந்தால் ஆனந்தர் சொன்ன அந்தக் கருத்துக்களே அவனுக்குள் அலைமோதின.

'இது புண்ணியபூமி. உரிய வேளையில் உரியவர்கள் தோன்றி வழி காட்டுவர்.' ஆனந்தர் சொன்ன இறுதி வரி ஆரம்பத்தில் நம்பிக்கையை விதைத்தது. பிறகு உரிய நபர் தான்தான் என்று எண்ண வைத்தது. 'இனி மாய்ந்து போதல் இல்லை. ஓய்ந்து போதல் இல்லை. அகிம்சை வழியில் விவேகப் போர்தான்'

www.cleanindians.com



''நீ சொல்றதெல்லாம் கேக்க நல்லா இருக்கு. ஆனா நடைமுறைக்கு ஒத்துவராது.'' - கூட்டுறவு சொஸைட்டி தொடங்கும் விருப்பத்தை அவன் ஒரு பெரியவரிடம் சொன்ன போது இளக்கார மாய்ப் பதில் வந்தது அவரிடம்.

''ஏன் அப்படிச் சொல்றீங்க?''

''என் வயசு எண்பது. உன் மாதிரி ஆயிரம் பேரைப் பார்த்துட்டேன். ஆரம்பம் எப்பவுமே இப்படிச் சூரத்தனமாத்தான் இருக்கும். போகப் போக அடைமழையாகப் பிசிரடிக்க ஆரம்பிச் சுடும். ஊருக்குச் சேவை செய்யறேன்னு கிளம்பி, நடு வழியில் பணத்தைக் கண்டதும், எத்தனை நல்லவன் புத்தி மாறி இருக்கான் தெரியுமா? ஏன் நானும்கூட அப்படித்தான். இது சகஜமான மனுஷத்தனம். நீ போய்ப் படிச்ச படிப்புக்குத் தக்குன வேலையப் பாரு. ஏன் அலட்டிக்கிறே?''

பெரியவர் விரக்தியில் தாளிப்பதைத் திடத் தோடு தாங்கிக் கொண்டான் சண்முகம். பழைய சண்முகமாக இருந்திருந்தால் காறித்துப்பிவிட்டுப் போயிருப்பான். இந்த முறை அயரவில்லை.

''இப்படிப் பேசிப் பேசித்தான் இப்படி ஆயிட்டோம். நம்ப தொழில் மெல்ல தேஞ்சு போய், இப்ப வேகமாத் தேய ஆரம்பிச்சிடிச்சு. இன்னும் சில வருஷங்கள்ள கைத்தறிங்கறது அறவே இல்லாமப் போயிடும்.''

''அதுக்கு என்ன பண்ணச் சொல்றே? ஐம்புலனையும் ஒடுக்கி வேற எந்தத் தொழில் நீ பார்க்கறே? அப்படிப் பார்த்தும் என்ன பலன்? வயித்துக்கே பத்தாத எரிச்சல்தானே? பிறகு இது தேயாம வளருமா?''

''அதனாலதான் சொல்றேன், காரணத்தைத் தேடிப்பிடிச்சு ஒத்துமையா உழைப்போம்னு. எவ்வளவோ இடங்கள்ள கூட்டுறவு சங்கத்தால

ஆயிரக் கணக்கான பேர் நல்லா இருக்காங்க.''

''ஒன்னுரெண்டு இடத்துல தெரியாம நல்லது நடந்துக்கிட்டிருக்கலாம். நீ போ ராஜா, இதெல்லாம் நமக்கு ஒத்து வராது.''

இறுதியில் அவன் நிலை குலைந்து விம்மிய போது ஆறுதலாக அவன் கண்ணீரைத் துடைத்தவன் உம்மாச்சி தான்.

''அண்ணே, நான் சிறுகச் சிறுக நூறு ரூவாய்க்கு மேல சேர்த்திருக்கேன். உனக்கு எவ்வளவு வேணும்ணே? நான் உன்னை நம்பறேண்ணே''

சில்லறைகளை எடுத்துச் சண்முகம் முன்னால் கொட்டினான்.

''நானும் இவரை நம்பறேன்,'' பெண் ஒருத்தி தனது கழுத்துச் செயினை முதலீடாக்கினாள். சிலிர்த்துப்போய் நிமிர்ந்தான் சண்முகம். சரஸ்வதி என்னும் அவள் பார்வையில் காலத்துக்கும் துணைவரும் காதல் தென்பட்டது. பிறகு நிபந்தனை, கண்டிப்பு, ஒப்புதல், சந்தேகம் என்னும் ரகத்தில் ரூபாயும் சில்லறையும் குவியக் குவிய, மனுவுடன் அரசாங்கத்தின் எதிரே போய்க் கை கட்டினான். அதுவும் உதவ, ஒரு சின்ன வீடு சங்கத்தின் அலுவலகமானது. உறுப்பினர்கள் ஒவ்வோர் அங்குலச் சேலையையும் வேட்டியையும் எப்பொழுதும் காட்டாத அக்கறையுடன் உருவாக்கினர். உற்பத்தியில் பொருளின் தரமும் அநியாய இலாபமற்ற விலையும் பலரை ஈர்த்தன.

நடுவில் கமிஷன், அன்பளிப்பு என்று எதுவும் எந்த வகையிலும் நுழைய இடம் தராதபடி அனைத்துச் செயல்களையும் விழிப்புடன் மேற்கொண்டான். அதனால், அந்த இடத்தில் ஒரு ராணுவக் கட்டுப்பாடு தானாகவே வந்து விட்டது.

அந்த வட்டாரத்தில் நெசவுக்குப் பாவு இல்லை, வேலைக்குத் தகுந்த கூலி இல்லை, வயிற்றுக்குச் சோறு இல்லை என்ற 'இல்லை'கள் ஒவ்வொன்றும்



கொஞ்சம் கொஞ்சமாக 'இல்லை' என்று ஆக, சண்முகம் எனும் தனி நபர் மீது கடவுளுக்கு நிகரான மதிப்பு பெருக ஆரம்பித்தது.

மாமூல் இல்லாமல் ஒரு பொருளையும் நகர்த்திப் பழக்கப்பட்டிராத பலருக்கு சண்முகம் ஒரு நெருடல் முள்ளாகி விட்டான்.

ஒரு சிலர் வயிற்றில் திராவகமே சுரக்க ஆரம்பித்தது. அதில் முக்கியமானவர் ரங்கசாமி.

கிடா மீசையும், சிவந்த விழியுமாய் எப்போதும் மிதமான போதையில் ஆச்சரித்தபடியே இருப்பார். இடுப்பு வேட்டியில் இருந்து உத்தரீயம் வரை எல்லாமே பட்டு. அதுவே, நிறையப் பட்டு சொஸைட்டிக்கு அவர் தலைவர் என்பதைச் சொல்லாமல் சொல்லும்.

ஆள் காட்டி விரலுக்கும், நடுவிரலுக்கும் மையத்தில் செம்பவழ, கரு நீல மோதிரங்களை உரசிக் கொண்டு ஃபில்டர் சிகரெட் சதா புகைந்த வண்ணம் இருக்கும்.

போனைச் சுழற்றினால் பெரிய அதிகாரிகளே கூடக் கொஞ்சம் யோசித்துப் பதில் சொல்லும்படியான தோரணையை உண்டாக்கி விடுவார். கறுப்பாலும், வெளுப்பாலும் சேர்த்த காசுக்குக் கணக்கு அவருக்கே தெரியாது. ஊருக்கே பெரிய மனிதர் போன்ற பாவனை, பேச்சு.

''ஐயா, என் மகளுக்குக் கல்யாணமுங்க. மொத நாளே மணமக்களை ஆசீர்வாதம் செய்துட்டுப் போகணுங்க. கட்டாயம் வரணும், அவசியம் வரணும்.''

மேற்படியாக அந்த வட்டாரத்தின் முதல் பத்திரிகை ரங்கசாமிக்குச் செல்வது வழக்கம். அது முதல் தடவையாக மாறிச் சண்முகத்தை நோக்கிச் சென்றது.

ரங்கசாமி, நல்லெண்ணெயில் அதிகமாகக் கருகிவிட்ட கடுகாக ஆகிவிட்டார்.

அவரது சங்கங்களிலிருந்து உறுப்பினர்கள் வரிசையாக விலகிச் சண்முகத்தின் சங்கத்துக்குப் படையெடுப்பதாகத் தகவல் வரவே அவர் குதிங்காலை நண்டு கவ்வியது.

''அண்ணே, நம்ப சங்கத்துலயும் சில சீர்திருத்தம் பண்ணிக் கொஞ்சம் விட்டுப் புடிச்சாத்தான் சொச்சம் இருக்கற மெம்பருங்க நிலைப்பாங்க.'' காரியதரிசி வந்து புலம்பினான்.

அதன் விளைவு? மெம்பர்களுக்கு அந்த ஆண்டு நட்டக் கணக்கு காட்டப்பட்ட நிலையிலும் தீபாவளி போனஸ் போடப்பட்டது.

''சண்முகமண்ணே! நீங்க நேரடியாப் பயன்பட்றது பத்தாதுன்னு மறைமுகமாவும் பயன்பட ஆரம்பிச்சுட்டீங்க. நம்ம சொஸைட்டி வளர்ச்சியைப் பார்த்துப் பக்கத்து சொஸைட்டி காரங்கள்ளாம் பொறாமைப்பட ஆரம்பிச்சாச்சு. இருக்கற ஆளுங்களை சந்தோஷப்படுத்த போனஸ் அது இதுன்னு அள்ளிவிட்றாங்க. ஒரு காலத்துல முட்டிமோதி மண்டையை உடைச்சிக்கிட்டாலே கெடைக்காத விஷயமெல்லாம் இப்ப சர்வ சாதாரணமாயிடிச்சு பார்த்தீங்களா?''

சண்முகம் அதைக் கேட்டு உள்ளூற மகிழ்ந்து போனான். 'இழக்கிற பொருளுக்கு இணையாகத் தான் கிடைக்கிற பொருள் இருக்கும்.' ஆனந்தின் கருத்து ஒரு புதிய பரிமாணத்தில் அவனுள் இப்போது படிந்தது.

அந்த மகிழ்ச்சியை ரங்கசாமியின் தொலைபேசி அழைப்புக் குலைத்தது.

''வணக்கம் சண்முகம். கொஞ்சம் நான் உன்னைப் பார்க்கணுமே? என் செகரட்டரி வந்தப்போ உங்க செகரட்டரி சரியா மரியாதை தரலியாமே, என்னப்பா இதெல்லாம்?''

''நேர்ல பேசுவமே ''

அவன் அவரை நேரில் போய்ச் சந்தித்தான்.

www.cleanindians.com



''இவ்வளவு பாடுபட்டு சாதிச்சிருக்கியே உனக்கு என்ன மிச்சம்?'' விஸ்கியில் சோடா கலக்கும்போது கேட்டார் ரங்கசாமி.

''ஆத்ம திருப்திங்க.''

''ஆத்மதிருப்தி வயிற்றை நிரப்புமா?''

''ஏன், நான்தான் சம்பளம் வாங்கறேன்ல?''

''அது போதுமா?''

''தாராளமா! ''

''இந்த நாட்டுல கார், பங்களா, ஏர்கண்டிஷன், சினிமா, டிராமான்னு எவ்வளவோ வசதிங்க உண்டு அதையெல்லாம் வயசு இருக்கும்போதே அநுபவிச்சுக்கணும்.''

''பசி, பட்டினி, வேர்வை, அழுகைன்னு வளர்ந்தவங்களுக்கு அது சாத்தியம் இல்லே.''

''என்னப்பா 'நீ, கழுவுற தண்ணியில நழுவிக்கிட்டு? நாலு காசு சேக்கற வழியைப்பாரு. தேன் எடுக்கறவன் பொறங்கையை நக்கலாம். அதுல தப்பே இல்லை.''

''எடுக்கறது விஷம்னு நினையுங்க, அப்ப அந்த ஆசை தோணாது''

''வயசுக்கு மீறிப் பேசறே! உன் வயசுப் பையன் புட்டிக்கும், குட்டிக்கும் மசிஞ்சே தீரணும்னு இருந்தேன். நீ வித்தியாசமானவன்தான். ஆனா ஒண்ணு செல்றேன். உன்னால என் மரியாதை மதிப்பு எல்லாம் ரொம்ப தேஞ்சு போச்சு. இதை இனியும் நான் சகிச்சுக்க முடியாது. நீ மாறி என்னை அனுசரிச்சா நல்லது. இல்லாட்டி ரொம்பக் கஷ்டப்படுவே.''

''எனக்கும் கஷ்டம்னா ரொம்பப் பிடிக்கும்.''

எப்படி இப்படித்தன்னால் பேச முடிகிறது? எங்கிருந்து வந்தது இந்தச் சக்தி? எதிலிருந்து வந்தது இத்தனை தெளிவும் தெம்பும்? திரும்பும் பொழுது சண்முகத்துக்கு ஆச்சரியமாகத் தான் இருந்தது.

ஒரு நல்ல நாளில் சரசுவின் கழுத்தில் தாலியைக்

கட்டினான் சண்முகம். பத்திரிகையை ரங்கசாமிக்கும் அனுப்பியிருந்தான். ஆனால் அந்த மனிதருக்கு இவனது பெருந்தன்மை புரிய வில்லை. இவனைக் கவிழ்க்கும் வழியை விளக்கு வைத்துத் தேடிக்கொண்டிருந்தார் அவர்.

காளி சொன்ன யோசனை கொஞ்சம் பிடித்திருந்தது, ரங்கசாமிக்கு.

ஐயாயிரத்தை நம்பிக்கையோடு எடுத்துத் தந்தார்.

''அவன் ஒரு மாதிரியான ஆளா இருந்தாலும் அவன் சம்சாரம் தினம் இந்தச் சமூகத்துல அரிசி, பருப்பு, புளி, மிளகான்னு அலைமோதற ஏழை தானுங்களே? பணம்னா பல்லைக்காட்டாமலா போய்டுவா? பணத்தை அவகிட்ட சாமர்த்யமா சேர்த்துட்டு வந்துட்றேன். கொஞ்சம் விட்டுப் பிடிப்பம், என்ன நடக்குதுன்னு. பணம் திரும்பி வந்தா வேற வழியைப் பார்ப்போம். இல்லையா... வலையில் பறவை விழுந்திரிச் சின்னு நெனைப்போம். சரிதானே முதலாளி?''

பேசிவிட்டு ரூபாயை இடுப்பில் முடிந்து கொண்டான் காளி.

www.cleanindians.com

சண்முகம் இல்லாத வேளை தெரிந்து வீட்டை நெருங்கிச் சரசுவை வசப்படுத்த பார்த்ததில் ஒரு பெரும் மாற்றமே நிகழ - வேறு வழியை யோசிக்க வேண்டியதாயிற்று.

''அடி உதவற மாதிரி அண்ணன் தம்பி கூட உதவமாட்டாங்கயா. ஒரு கை, இல்லை காலை வாங்கிட்றோம். தன்னால் வழிக்கு வந்துருவான். இந்த மாதிரி விடாக்கண்டனுங்களை நான் இப்படித்தான் வழிக்குக் கொண்டு வந்து ருக்கேன்.''

ரங்கசாமி விட்டெறிந்த சில ஆயிரங்களைப் பொறுக்கிக் கொண்டு இந்த முறை முண்டா



தட்டியவன் மன்னார்சாமி.

எப்போதாவது மழைக்காலங்களில் நுரை ததும்பப் பாயும் திருமணி முத்தாற்றங்கரை யோரமாக எளிய கோயிலில் குடி இருக்கும் ரேணுகா அம்மனை சண்முகமும், உம்மாச்சியும் வணங்கிவிட்டுத் திரும்பும் பொழுது ஆளரவமற்ற அந்தப் பிராந்தியத்தில் சைக்கிள் செயின், அரிவாள் சகிதம் சிலர் வந்து சண்முகத்தை வளைத்தார்கள். வார்த்தைகளால் முதலில் அவனைத் தாக்கி னார்கள்.

மதிய வெயில் கனன்று கொண்டிருந்தது. தண்டவாளத்தின்மேல் விருத்தாசலத்தை நோக்கி உருண்டு கொண்டிருந்தது, சரக்கு ரெயில். இதுதான் சமயம் என்று அதன் ஓட்ட சப்தத்துடன் சண்முகத்தின் அடிபட்டு அலறும் சப்தத்தை இணைக்கப் பார்த்தனர்.

சண்முகம் மல்யுத்தம், சிலம்பில் தேர்ந்த பயிற்சி உள்ளவன்தான். ஆயினும் சூதுவாது கொண்ட வர்களின் தாக்குதலில் நிலைகுலைந்து விட்டான்.

உம்மாச்சியோ விதிர்த்துப் போய் நின்று விட்டாள். நடுவே பாய்ந்து தடுக்கப் பார்த்ததில் அங்கங்கே அவன் உடம்பிலும் சதை கழன்றது. சில நிமிடங்களில் ஆயுதங்கள் சிவந்துவிட்டன. எதிர்த் தாக்குதல் நடத்த முடியாத ஒரு வேகத்தில் அந்தச் சுவட்டை அழித்துக்கொண்டு ஓடி விட்டிருந்தனர்.

ஓடுபவர்களில் காளி மட்டுமே கொஞ்சம் பரிச்சயமானவன். பாவாயி வீடு தேடிப் பட்டை குடிக்க வருவான்.

சுய நிலைக்குத் திரும்பிய உம்மாச்சிக்கு ரெயில் கிராதியில் சண்முகத்தைச் சிவப்பாய் பார்த்தபோது மூச்சை அடைத்தது. 'ஓ' என்று அலறிக் கொண்டு புத்திசாலித்தனமாய் முதலில் போலீசுக்கு ஓடினாள்.

அவள் நினைப்பு முழுவதும் சரசுவை எண்ணிக்

கொந்தளித்துக் கொண்டிருந்தது. எல்லாம் ஒரு வழியாக முடிய, காலமோ சண்முகத்தின் வலக்கரம் தனக்கு வேண்டும் என்று எடுத்துக்கொண்டு விட்டது

வில்லை ஒட்டைத் தாளித்துக் கொண்டிருந்தான், வா■த்துச் சூரியன். வீட்டுக்குள்ளே உட்காரக் கூட முடியவில்லை. சண்முகத்தின் வதை உடலில் வியர்வை வஞ்சனையில்லாமல் ஓட ஆரம்பித்திருந்தது. பனை ஓலையில் காற்றை வாரி வாரி அவன் மேல் அப்பிக் கொண்டிருந்தாள் சரசு. கண்கள் கலங்கின.

''பைத்தியம்..! ஏன் அழறே? கை போனா என்ன, நீ இருக்கேல்ல?''

அதைக்கேட்ட அவள் விம்மல் வெடித்தது. அதில் அணுக்கள் கூடத் தோற்றன.

''எப்படிங்க இந்தக் கொடுமையை இவ்வளவு சாதாரணமா எடுத்துக்கறீங்க? அந்த ஆண்டவன் இருக்கானான்னு எனக்குச் சந்தேகமா இருக்குங்க. ஐயோ, பாழாப் போன அந்தப் பாவிங்க நாசமாப் போக...''

மடிவயிறு பற்றி எரிய அவள் சாபத்தை எடுத்து வீசினாள். ''ஏய், என்ன இது? வாழ்த்தத்தான் வாய் உபயோகப்படணும். இந்த மாதிரி சபிக்க இல்லை. பொது வாழ்க்கையில இதெல்லாம் ரொம்ப சகஜம். போர்க்களத்துல தாய் நாட்டுக்காக எவ்வளவு பேர் எவ்வளவு உறுப்புக்களை இழந்துருப்பாங்க! இதப்போய்ப் பெரிசா எடுத்துக்கறியே...?'' என்றான் சண்முகம்.

தன் கணவனை இந்த முறை அவள் தெய்வத்துக்கும் மேலாகவே பார்த்துக் கேவினாள்.

வாசலில் ஜீப் ஒன்று வந்து நிற்கும் அரவம்.

இன்ஸ்பெக்டர் ரகுராமன் இறங்கினார்.

''குட்மார்னிங் மிஸ்டர் சண்முகம். எப்படி

www.cleanindians.com



இருக்கீங்க?''

''பரவால்லே.''

''ஆமா, என்னங்க ஆச்சு? இவரை இந்தகதிக்கு ஆளாக்குனவங்களைப் பிடிச்சிட்டீங்களா?'' சரசு இடைவெட்டி ஆச்சரியத்துடன் நுழைந்தாள்.

''தேடிக்கிட்டே இருக்கோம். அதுக்கு முன்னை ஒரு விஷயம். அவங்க பெரிய ரவுடிங்க. திருந்தற ஜென்மங்க கிடையாது. அதனால் நீங்க இந்தக் கேஸ்ல எப்படி நடந்துக்கப் போறீங்கங்கறது தெரிஞ்சாகணும்.''

''எப்படி நடந்துக்கப் போறீங்கன்னா?'' பதற்றத்துடன் கேட்டாள் சரசு.

''இல்ல, வெளிய சொன்னாங்க, சண்முகம் இதையெல்லாம் பெரிசு படுத்தாது, சமாதானமாப் போகும்னுதான்.''

சண்முகத்திடம் மௌனம். ஆனால் சரசுவோ வெறிபிடித்த நிலைக்கே போய் விட்டாள்.

''சமாதானமாவா? வெளிய சொன்னாங்களா? யாரு? இதென்ன உறவுக் காரங்க சண்டையா, இல்லை காசு பண விஷயமா? நம்பிக்கை துரோகமா?-கொலை வெறி இன்ஸ்பெக்டர், கொலை வெறி! என் புருஷன் இழந்திருக்கறது ஈடுசெய்ய முடியாத இழப்பு. இந்த நிலைக்கு ஆளாக்கினவங்க கிட்ட சமாதானமா? இப்படிக் கேட்க உங்களுக்கு வெட்கமா இல்லை?''

-மறு விநாடியே திரும்பி விட்டது அவர் ஜீப். ஸ்டேஷனில் ம்ண்டையை உடைத்துக் கொண்டார். உலகத்திலேயே மோசமான உத்யோகம் இதுதான். தம்முள் புலம்பிக் கொண்டார். ரங்கசாமியை நினைக்க கொஞ்சம் பயமாக இருந்தது. மனிதர் தொல்லை தரலாம். இந்தக் கேஸை எப்படித் தொடர்வது? ஏறத்தாழ அரை மணிநேரம் போராடி விட்டு அவர் மனசு ரங்கசாமி

பக்கமே சாய்ந்தது.

ஏட்டையா ஒரு கடிதத்தை எடுத்து வந்தார்.

''என்னயா?'' ரகுராமன்.

''க்ரைம் பிராஞ்சுல இருந்து வந்துருக்கு சார். சண்முகம் கேஸ் சம்பந்தமான குற்றப்பத்திரிகை எவ்வளவு தூரத்துல இருக்குன்னு கேட்டிருக்காங்க. இதுக்கு மேலையும் ஜவ்வா இழுக்க முடியாதுங்க. கிரைம் பிராஞ்ச் இன்ஸ்பெக்டர்தான் சம்பவத்தன்னிக்குப் புலன் விசாரணை செய்தாரு. நீங்க அப்ப லீவுல போயிருந்தீங்க. ஆகையினால அவரோட சர்வீசும் இந்த கேசுல சம்பந்தப்பட்டிருக்கு. ஹை அத்தாரிட்டி வேற. சட்டு புட்டுன்னு எதையாவது செஞ்சாகணும்!''

ஏட்டையா விவரித்தார்

''குடி போதைல நடந்த கலாட்டாங்கறதை ஊர்ஜிதப்படுத்தி அறிக்கை பண்ணிடுங்க, அடிச்ச ஆளுங்க தலைமறைவு ஆயிட்டாங்க. அவ்வளவு பேரும் போலீஸ் ஸ்டேஷன்ல கேடிங்க லிஸ்ட்ல இருக்கற ரௌடிங்க, தேடிக்கிட்டு இருக்கோம்னு ருசு காண்பிச்சிடலாம். தப்பித் தவறிக் கூட வில்லங்கம் வரும்படி யார் பேரையும் பயன் படுத்தவேணாம்.''

ரகுராமன் யாரைக் குறிப்பிடுகிறார் என்பது ஏட்டையாவுக்குப் புரிந்தது.

''அதுல சிக்கல் இருக்கு சார். காளியைப் பிடிச்சு விசாரணை பண்ணியிருக்கோம். அவன் பேரும், அவன் சொன்ன விஷயமும் அறிக்கைல வந்தாகணும். பழைய ஷரத்துக்களை மாற்ற முடியுமா? பின்னால விவகாரம்லாம் வரும் சார்.''

ரகுராமன் கொஞ்சம் யோசித்தார். பிறகு-கணக்கத்தோடு வாயைத் திறந்தார்.

''காளியைச் சந்தேகத்துல கைது பண்ணோம்னு

www.cleanindians.com



காமிச்சுடுங்க.''

''சார், விவகாரத்துக்கு தற்காலிகமா ஒரு விடிவைத் தேடலாம். ஆனா சண்முகம் தகுந்த நியாயம் வேணும்னு கோர்ட்டுக்குப் போனா?'' - தம் சந்தேகத்தை இலேசாகக் கோடிட்டுக் காட்டினார் ஏட்டையா.

''போலீஸை எதுத்துக் கோர்ட்டுக்குப் போற அளவுக்கு இங்க யாருக்குயா 'தில்' இருக்கு? நாலு நாளைக்கு அவனும் அவன் பெண்டாட்டியும் புலம்புவாங்க. பின்னால் எல்லாம் சரியாயிடும். உமக்கு இதெல்லாம் நான் சொன்னாத்தான் தெரியுமா?''

ஏட்டையா வாயை மூடிக்கொண்டார். அறிக்கை வேகமாகத் தயாராக ஆரம்பித்தது. தம் ஆசனத்தில் ஆசுவாசித்த இன்ஸ்பெக்டரின் மூச்சுக் குழலில் நிம்மதியின் பயணம்.

அந்த பயணத்துக்குக் கட்டியம் கூறியது டெலிபோன் ஒலி. ரிசீவரை எடுத்தார்.

''ஹலோ... போலீஸ் ஸ்டேஷன், நான் எஸ்.ஐ, ரகுராமன் பேசறேன்.''

''யாரு இன்ஸ்பெக்டரேவா? நான்தான் ரங்கசாமி பேசறேன்.'' மறுமுனை பதில் அவர் நாற்காலியில் சரிந்திருந்த தோரணையில் விரைப்பேற்படுத்தியது.

''வணக்கம் சார், என்ன விஷயம்?''

''சகலபாடி எம்.எல்.ஏ. வர்றாராம்ல...? கூடவே மினிஸ்டரும் வர்றாராம்ல...?'' வெகு சகஜமாகக் கேட்டார் ரங்கசாமி.

''ஆமா சார், எங்களுக்கும் தாக்கல் வந்துருக்கு, நாளைக்கு ஒரு பள்ளிக்கூடத் திறப்பு விழாவுக்கு வர்றாங்க. நம்ப கண்ட்ரோல் ஏரியாதான். செக்யூரிட்டிக்குக் கூட ஏற்பாடெல்லாம் பண்ணிட்டோம்.''

''நல்லது, அதைத் தெரிஞ்சுக்கத்தான் போன்

பண்ணினேன். தொடர்ந்து நாலு தடவை இந்தத் தொகுதியில தேர்ந்தெடுக்கப் பட்டவரு என் சகலை. ஆகையினால எதிர்ப்பும் பொறாமையும் இருக்கறது சகஜந் தானே?''

''ஆமாமா, இதிலென்ன சந்தேகம்? நீங்க கவலைப்படாதீங்க. ஏற்பாடு பலந்தான். ரிசர்வ் போலீஸ்கிட்டயெல்லாம் டிமாண்ட் பண்ணியிருக்கோம்.''

''ஆமா, இந்த சண்முகம் அடி உதை விவகாரத்தைச் சரி பண்ணிட்டீங்க தானே?'' அப்படியே முக்கியமாக எதைத் தெரிந்து கொள்ள தொலைபேசியைத் தொட்டாரோ, அந்த விஷயத்திற்கு மிகச் சாதாரணமாக வரும் பாவனையில் வந்தார்.

''சார், அது முடிஞ்சுபோன விஷயம். அதை 'டயலூட்' பண்ணிச் சிக்கல் வராதபடி பண்ணிடுவோம். கவலைப்படாதீங்க. குரல் உடைஞ்சமாதிரி தெரியுதே, ஜலதோஷங்களா?''

''ஆமாமா, க்ளைமேட் சேஞ்ஜ் ஒத்துக்கல. அப்ப இந்தப் பக்கம் வந்தா வந்துட்டுப் போங்க. சிப்பா பிளாட்டுங்க பிரிச்சிருக்கேன். கஸ்தூரிபா பேர்ல. பிள்ளைகுட்டிங்க பேர்ல ஒண்ணு வாங்கிட வேண்டியது தானே? கஸ்தூரிபா நகர் பிளாட்டுன்னா அதுல சகல வசதியும் உண்டுய்யா.''

''அப்படியா, சந்தோஷம்! ஆமா... 'கஸ்தூரிபா' பேரைஏன் வெச்சீங்க? நம்ம மாநிலத் தலைவர்கள் யார் பேரையாவது...''

''காரணமாத்தான். காலம் போற போக்கப் பார்த்தா யார் ஆட்சிக்கு வருவான் போவான்னே தெரியலே. அந்த அம்மா இந்தத் தேசத்துக்கே தாய்மாதிரி பொதுவானவங்க. எந்தக் கட்சிக்காரனும் நாளைக்குச் சிக்கல் உண்டு பண்ணனும்னாலும் பண்ண முடியாது பாரு.''

''பெரிய ஆளு சார் நீங்க. எங்கிட்ட பணந்தான்

www.cleanindians.com



இல்லே.''

''நான் என்ன பணத்துக்காகப் பறக்கறவனா? சினேகிதம் பெரிசு நமக்கு, கட்டாயம் வந்துருய்யா. பிளாட் இல்லாமப் போயிடப்போவுது. பணத்தைப் பார்த்துக்கலாம்.''

தோரணையாக, மரியாதையாக ஆரம்பித்த ஒரு பேச்சு மெல்ல வளரவேண்டிய விதத்தில் வளர்ந்து, இன்ஸ்பெக்டரை விழுங்கி, பின்பு ஒரு நெடுநாள் சிநேகிதத்துக்கு உரிய அழுத்தமாக உருமாறி, நடிப்பின் சிகரமாய் முடிந்தது.

**வீ**தி சகஜ நிலையில் தென்பட்டது. வழக்கம்போல் பாவு நூலை இழுத்துக்கட்டி உலர வைத்துக் கொண்டிருந்தது ஒரு கூட்டம். திண்ணைகளில் திருவட்டமும் கையுமாக நூல் நூற்கும் வயதானவர்கள். அச்சுப் பிணைக்கும் ஆட்கள். இடைவிடாத சப்தம் போடும் நெசவுத்தறிகள்.

ஒற்றைக் கையுடன் - கொஞ்சம் உடல் சோர்விலிருந்தாலும் சூழ்நிலையைப் பார்த்துச் சந்தோஷத்துடன் நடந்து கொண்டிருந்தான் சண்முகம். உடன் உம்மாச்சி! ''அண்ணே, இந்த நிலையில் சொஸைட்டிக்கு நீங்க வரணுமா?'' அவன் குரலில் விசாரம்.

''எனக்கு இப்ப என்ன ஆயிடிச்சு உம்மா? ஏன் எல்லாரும் இப்படிக் கேக்கறீங்க? எவ்வளவு நாளாச்சு சொஸைட்டி பக்கம் நான் போய்? ஆமா, எனக்கு ஏற்பட்ட சம்பவத்தால சொஸைட்டி நடவடிக்கை பாதிக்கப்படலையே?''

''இல்லைண்ணே! ராகவாச்சாரி எல்லா வேலையையும் இழுத்துக் கட்டிப் பார்த்தாரு. ராத்திரில கூட வீட்டுக்கும் போகமாட்டாரு. சொஸைட்டியிலதான் படுக்கை.''

''வேலை இல்லேன்னு யாரும் சும்மா

உட்காந்துரக் கூடாது. ஒழுங்கா பாவு விநியோகம் நடக்குதுல்லே?''

''முன்னையெல்லாம் ஒரு தறிக்கு ஒரு மாசம் எடுத்துக்கறவங்கல்லாம் இருபது நாள்ல இப்ப தெம்பா முடிக்கறாங்க. ஆண்டவன் புண்ணியத்துல சரக்கும் ஏதோ போய்க்கிட்டிருக்கு. பொங்கல் வரப் போவுதுல்ல, எல்லாம் கடன் கொஞ்சம் எதிர்பார்க்கறாங்க.''

வீதியில் பேசியவண்ணம் நடக்கும்போது எதிர்ப்பட்ட அனைவரும் கையெடுத்துக்கும்பிட, முதல் தடவையாக சண்முகம் தன் கையை இழந்தமைக்காக வருத்தப்பட்டான்.

''உம்மா, இப்பத்தான் ரொம்பக் கவலையா இருக்கு. இரண்டு கை கூப்பி வணக்கம் சொல்றவங்களுக்குப் பதில் வணக்கம் சொல்ல முடியலையே என்னால?.''

''நீங்க வணக்கம் சொல்லலேன்னா பரவால்ல. ஆனா எதையுமேல்ல சொல்ல மாட்டேங்கறீங்க. எல்லார்க்கும் உங்க பேர்ல வருத்தம்ணே!''

''புரியும்படி சொல்லு, உம்மா.''

''உங்களை இப்படி நாலு பேர் தாக்கக் காரணம் என்ன? எவன் இப்படிச் செஞ்சது? ஆளை இலேசா அடையாளம் காட்டட்டும், பதிலுக்கு அவங்க ரெண்டு கையையும் நாங்க வாங்கறோம்னு துடிச்சுக்கிட்டு இருக்காங்க எல்லாரும்''

''அப்படிச் செஞ்சா என் கை எனக்குத் திரும்ப வந்திடுமா?''

''என்னண்ணே நீங்க? ஒரு ஆத்திரம் தான், வெட்றதுக்கு கை என்ன கத்தரிக்காயா? வெண்டைக்காயா? இன்னிக்கு உங்களை வெட்டினாங்க, நாளைக்கு இன்னொருத்தனை வெட்டுவாங்க. இப்படியே போனா நாளைக்கு உங்களை மாதிரி நல்லது செய்யவோ, நினைக்கவோ எவருக்கு மனசுல துணிவு வரும்? அதுக்காகவாவது தட்டிக்

www.cleanindians.com



கேட்க வேண்டாமா?''

''அதையெல்லாம் போலீஸ் வேடிக்கை பார்க்காது உம்மா.''

''உங்க போலீசைத் தூக்கி உடப்புல போடுங்க, அண்ணே! எனக்கு எலை மறைவு, காய் மறைவா உங்களுக்கு இப்படி ஆகக் காரணம் தெரியும். எனக்கு மட்டுமில்ல ஊருக்கும் தெரியும். இதுக்கெல்லாம் மூலம் அந்த ரங்கசாமி தானே''

''உம்மா...! அவசரப்படக்கூடாது. பொறுத்திருந்து பார்ப்பம். எனக்கு நடந்தது ஒரு மோசமான அனுபவந்தான். என்ன பண்றது? இது பழி வாங்கறுதுங்கற பேர்ல ஒரு தொடர்கதை ஆயிடக்கூடாது. சமாதானமா முடியணும். ஒரு தனி மனிதனுக்காக சமூகத்துல குழப்பம் வரலாமா? அதை நான் விரும்பலே. அதனாலதான் வாயைத் திறக்காம இருக்கேன். சட்டம் தன் கடமையை ஒழுங்காச் செய்யலேன்னாலும் நான் கவலைப் படப் போறதில்லே, எனக்கு நீங்க இருக்கீங்க, அதுபோதும்.''

''ரொம்ப மோசமான முடிவு அண்ணே. குற்றவாளி தப்பக்கூடாது.''

''அவன் தப்பமாட்டான். அவனுக்கு ஆண்டவன் தண்டனை கொடுப்பான்.''

''ஆண்டவன் கிழிப்பான். ஏண்ணே வயித் தெரிச்சலைக் கொட்டிக்கிட்டு. வரவர நீங்க முழுச் சாமியாராவே ஆயிட்டீங்க. இனி உங்ககிட்ட பேசிப் பிரயோஜனமில்லை. கைல சுருள் பட்டா எடுத்து, வீதியில் ரேணுகா அம்மன் சாமி கும்பிடறச்சே, வீரமா சுருண்டு விளையாடின உங்க வீரம்லாம் எங்கண்ணே போச்சு - சிங்கம் பசுமாடா மாறின கணக்கா?'' உம்மா அழமாட்டாமல் அழுது வெடித்தான்.

''அண்ணே, உங்களை இந்த ஜென்மத்துல சந்திச்சதுக்காகவும், பழகறதுக்காகவும் நான்

ரொம்பப் பெருமை பட்டேண்ணே. உன்னாலதான் என் லூசுப்பட்டம் கூடக் கொஞ்சம் மாறியிருக்குது. ஆனா இப்படியே இருக்காதே. நீயும் இல்லாமப் போயிட்டா மனுஷன் மட்டுமில்ல, நெசவுத் தறிங்க, பாவுங்க, நூலுங்க இதெல்லாம் கூட அழுவும். ஆனா உம்மாச்சி அதையெல்லாம் வேடிக்கை பார்க்கமாட்டாண்ணே''

உம்மாச்சி பேசி முடித்தபோது அவனது உடல் சிலிர்ப்பால் விழியில்கூட நீர் தேங்கியிருந்தது. அந்தச் சிலிர்ப்போடு சில முடிவுகளுக்கும் அவன் வந்திருந்தான்.

**நா**ட்கள் சிட்டாய்ப் பறக்கின்றன. போலீஸ்தரப்பில் இருந்து எந்த ஒரு தகவலோ, அழைப்போ, விசாரணையோ இல்லை. சரசு அதிக வேதனைப்பட்டாள். அடிவயிற்றில் அடிக்கடி அடக்கமாட்டாத எரிச்சல் ஏற்பட - அதை அழுது அணைக்கப் பார்த்தாள். உம்மாவுக்குப் புரிந்தது.

''ஏன் சரசு அழுவறே? போலீசை நெனைச்சுத்தானே? அவங்களை யார் விட்டா, இரு நான் போய்க் கேட்டுட்டு வந்துட்றேன்.'' என்றான்.

''வேண்டாம் உம்மா, அவருக்குத் தெரிஞ்சா திட்டுவார். அடுத்து உன்னையும் லூசுப்பய, கோமாளிப் பயன்னு போலீஸ்காரங்க திட்டலாம்.''

''அவனுங்க திட்டு என்னை என்னா பண்ணிப்பிடும்? பந்தா இல்லாம வசதிக்கு உடுப்பு போட்டா லூசா? நீ சும்மா இரு சரசு, இதை இப்படியே விடக்கூடாது. நான் யாருன்னு காட்டறேன்.''

ஓடினான் போலீஸ் ஸ்டேஷனுக்கு.

''என்னா சார் ஆச்சு எங்கண்ணன் விஷயம்?'' குழந்தைத்தனம் மிளிர நெஞ்சை நிமிர்த்தினான் ஏட்டையா முன்.

www.cleanindians.com



''என்னா ஆச்சா? நீ யார்டா பவிசா கேக்க வந்துட்டே? அடி வாங்குன ஆளே நமக்கென்ன வந்துச்சுன்னு சமர்தானமாப் போயிட்டாரு.''

''பொய் சொல்றீங்க. கேஸ் என்ன ஆச்சு? அதச் சொல்லுங்க.''

''கேஸ் முட்டைக் கோஸ் ஆயிடிச்சு. போடான்னா... அடிச்ச ஆளுங்களைத் தேடிக்கிட்டு இருக்கோம். இன்னும் பிடிக்க முடியலேன்னு போய்ச் சொல்லு.''

'' 'சர்க்கார்ல ரூவா நோட்டு அடிக்கலே. அத அடிக்கற மெஷினு ரிப்பேரு. அதனால இந்த மாசம் சம்பளமில்லை, அப்பறமா அடிச்சுத்தர்றோம், வேலை பாருங்க'ன்னா பாப் பீங்களா?''

ஏட்டையாவுக்குள் அதிர்ச்சி. இவன் தானாகத்தான் பேசுகிறானா. இல்லை யாராவது பேச வைக்கிறார்களா? கொஞ்சம் கடுமையோடு அவர் அவனைப் பார்த்தார்.

''உம்மாச்சி, நீ லூசுங்கறதனால உன் கூட நின்னு பேசிக்கிட்டு இருக்கேன். இல்லேன்னா தாளிச்சிருப்பேன், மரியாதையா இடத்தைக் காலி பண்ணு. இங்க எங்களுக்கு நிறைய வேலை இருக்கு.''

''ஓஹோ..! அப்படீங்களா..! இப்படில்லாம் கேட்டா நீங்க வழிக்கு வரமாட்டீங்க. கேக்கற விதத்துல கேக்கறேன்.''

அவலமான விவகாரத்தைக் கொஞ்சம் விளையாட்டாக அணுகிவிட்டு வெளியே வந்த உம்மாச்சி ஒருமுறை தனது சரீரத்தை மட்டும் உற்றுப் பார்த்துக் கொண்டான்.

**கூ**ட்டுறவுச் சங்கத்தில் ஏக வேலைகளுக்கு நடுவில் ஒற்றைக் கையோடு அல்லாடிக் கொண்டிருந்த சண்முகத்தின் செவிகளில் அந்த விஷயம் பாய்ந்தபோது அவனால் நம்பவே

முடியவில்லை.

''என்னது..? உண்ணாவிரதம் இருக்கானா உம்மாச்சி? அதுவும் எனக்காகவா?'' - கேட்டு விட்டு வேகமாகக் கிளம்பினான்.

போலீஸ் ஸ்டேஷக்கு வெளியே சாலை ஓரமாகச் சப்பணமிட்டு விட்டிருந்தது உம்மாச்சியின் உடம்பு.

''டேய் உம்மாச்சி, என்னடா இதெல்லாம்?'' நண்பர்கள் சூழ்ந்து அவனைப் பிடுங்கிக் கொண்டிருந்தனர். பக்கத்தில் போலீஸ்.

''சார், அவனை இடத்தைக் காலிபண்ணச் சொல்லுங்க. உண்ணாவிரதங்கறது ஒண்ணும் அவன் விளையாட்ற கோலிக்குண்டு விளையாட்டு இல்ல. படு சீரியஸான விஷயம். அதுக்குப் போலீஸ்கிட்ட ப்ர்மிஷன்லாம் வாங்கணும். இல்லேன்னா தற்கொலை முயற்சின்னு கேஸ் பதிஞ்சு உள்ளதள்ளிடுவோம்.''

போலீஸ்காரர் ஒருவர் உரக்கக் கத்தினார். அவருக்குள் உதைப்பு. அவர்கள் சற்றும் எதிர்ப்பார்க்காத நெருக்கடி அல்லவா? உள்ளே ரகுராமன் உஷ்ணத்தில் இருந்தார். அடுத்த விநாடியே தடியைச் சுழற்றிக் கொண்டு போலீசார் உம்மாச்சியை நெருங்கினார்கள். நல்லவேளை சண்முகம் வந்துவிட்டான்.

''சார் சார், நான் பார்த்துக்கறேன். நீங்க போங்க.'' தயவாகக் கெஞ்சினான். பிரச்னையின் மூலவேரே 'விலகுகிறேன்' என்கிறது. அப்புறம் என்ன? போலீசார் தங்கள் மகிழ்ச்சியை மறைத்துக் கொள்ளப் பார்த்தார்கள்.

உம்மாச்சியை குண்டுக் கட்டாக இருவர் தூக்கினார்கள். ''என்னைத் தொடாதீங்க, என்னைத் தூக்காதீங்க, எங்க சண்முகம் அண்ணனுக்குத் தகுந்த நியாயம் வேணும். போலீஸ்காரங்க ஏமாற்றப் பார்க்கறாங்க, தகுந்த

www.cleanindians.com



நியாயம் வேணும்... தகுந்த நியாயம் வேணும்...''

அவன் அலறிய அலறலில் அந்தப் பகுதியே நடுங்கியது. ஸ்டேஷனுக்குள் வேகமாகத் துடித்துக் கொண்டிருந்த ரகுராமனின் இதயம் ஒருவாறாக அமைதியடைந்து, மிகச் சரியாக நிமிடத்துக்கு எழுபத்தாறு தடவை என்னும் இயல்பான அளவை எட்டியது.

வெளியே எல்லாரும் உம்மாச்சியைப் போட்டுப் பிடுங்க ஆரம்பித்திருந்தனர்.

''கேனப் பயலே! உன்னால் ஒருவேளை கஞ்சி இல்லாம இருக்க முடியாது. நீயெல்லாம் உண்ணாவிரதம், உசுர்ப்போருன்னுக்கிட்டு...''

''நியாயம் கேட்க எவ்வளவோ வழி இருக்கு, இவன் கிறுக்குத்தனமா...''

''போலீஸ்காரங்க, தற்கொலை பண்ணிக்கப் போறான்னு சொல்லிப் பிடிச்சு உள்ள தள்ளாம விட்டாங்களே, நல்லவேளை.''

சவுடால் மனிதர்களைத் தாண்டிக் கொண்டு கண்ணீரோடு உள்ளே நுழைந்தாள் சரசு. அவளுக்கு உம்மாச்சியின் பிரக்ஞை உயிர்த் துடிப்பாய்த் தெரிந்தது.

''உம்மா, உம்மா, உன் நல்ல எண்ணத்துக்கு நான் எப்படிடா கைம்மாறு செய்யப் போறேன்?'' என்றபடி வந்து கட்டிக்கொண்டாள்.

இதற்குள் திண்ணையில் இட்லி சுட்டு விற்றுப் பிழைப்பு நடத்தும் அவனது விதவைத் தாயான வள்ளியம்மையும் அங்கு வந்துவிட்டாள்.

''டேய் உம்மா, என்னடா இது அலங்கோலம், நான் கேள்விப்பட்டதெல்லாம் நெஜந்தானா?''

''வா ஆத்தா, நெஜந்தான்.''

''அப்ப நீ சாவ முடிவு பண்ணீட்டியா?''

''இருந்து தான் என்ன சுகம் ஆத்தா? லூசு, கேனயன்னு எல்லாரும் வையறாங்களே, நானு லூசா ஆத்தா?''

''அடேய், நீ சொக்கத் தங்கம்டா, ஆமா இந்தக் கெளவியை விட்டுட்டுச் சாவறேங்கிறியே, நான் என்னாடா பண்ணுவேன்?''

''நீயும் செத்துரு ஆத்தா, சும்மா சாவாத ஆத்தா. எதாச்சும் ஒரு நல்ல காரியத்துக்கு முயற்சி பண்ணு. இந்த உலகத்துல தன்னால உன்னைக் கொன்னுடுவாங்க.''

அந்த விதைவைத் தாயின் கண்களில் கண்ணீர் கூடு கட்டி முட்டையிட்டு அதனைக் கன்னத்தில் உருட்டியும் விட்டது.

''அழுவாத. புத்தி சொல்லி இழுத்துக் கிட்டுப் போ. சோத்த போடு. திரும்பப் போலீஸ் வந்து இழுத்துக்கிட்டுப் போகப் போறாங்க.''

''வாடா உம்மா.'' அவள் அவனை அழைத்தாள். அவனும் ,எழுந்து அவளைத் தொடர்ந்தான். எல்லோரையும் ஒரு முறை பார்த்தான். சண்முகத்தை நெருங்கிப் பேசினான்.

''அடிக்கடி ஒண்ணு சொல்வீங்க, ஞாபகம் இருக்காண்ணே?''

''என்னப்பா?'' - சண்முகம்.

''இழக்கற பொருளுக்கு இணையாத்தான் கிடைக்கிறது இருக்கும்னு.''

''ஆமா.''

''உனக்குக் கிடைக்க வேண்டிய நீதி நியாயம் கூடப் பல உசுருக்குச் சமமான ஒண்ணுதான். கடப்பாறையை விழுங்கி, சுக்குக் கஷாயத்தால ஜீரணம் பண்றவங்களுக்கு மத்தியில என் செய்கை இப்ப உனக்கும் கேலியாத் தெரியும், பின்னால புரியும்ணே.''

''சே... சே... அப்படி எல்லாம் ஒண்ணுமில்லே. எனக்காக அடுத்தவங்க கஷ்டப்பட்றதை நான் விரும்பலே.''

''அப்ப நான் அடுத்தவனா?''

''உம்மா, என்னை ஏண்டா கொல்றே?''



''தினம் தினம் செத்துக்கிட்டிருவங்க மத்தியில ஒரு விளக்கா கிடைச்சவன் அண்ணே நீ. உன்னையும் ஊதி அணைக்கப் பார்க்கறாங்களே? விடலாமா? விடுவேனா? இப்பவும் சொல்றேன், நான் பழைய ஓூரசுப்பய ஊவன்னா; மாவன்னா, சிதம்பரம் இல்லே; தியாகம் உனக்கு மட்டும் பொதுவுமில்ல. நான் சாப்பிட மாட்டேன்னா சாப்பிடமாட்டேன். நியாயம் கிடைச்சே தீரணும் எனக்கு.''

சூழ்ந்திருந்தவர்கள் அனைவர் பார்வையிலும் இப்போது உம்மாச்சி ஒரு மலையாய் உயர்ந்து விட்டிருந்தான். சிலருக்குத் தாங்களும், அவனோடு சேர்ந்து விரதமிருந்தால் என்ன என்று தோன்றியது.

''சார், உண்ணாவிரதத்துக்குப் பர்மிஷன் கேட்டு வந்துருக்காங்க.'' ரைட்டர், ரகுராமனைப் போய் இடிக்க, ரகுராமன் இடி விழுந்த மாதிரி ஆனார்.

''கொடுக்கக் கூடாதுயா. அவ்வளவு பேரையும் பிடிச்சு லாக் அப்புல வை.'' கத்தினார்.

''தட்டிபேனர்னு எழுதிக் குவிச்சுக்கிட்டுக் கூட்டமா வந்து இருக்காங்க, எதை வெச்சு அரஸ்ட் பண்ண? கூட்டத்துல படிச்சவங்களும் இருக்காங்க - வக்கில், டாக்டர்னு''

ரகுராமன் முகத்தில் வியர்வை நதியானது. எழுந்திருந்து வெளியே வந்தார்.

''உங்க எல்லார்க்கும் ஒரு விஷயம், சண்முகம் தாக்கப்பட்ட வன்முறைச் சம்பவம் தொடர்பா நிச்சயம் வேக நடவடிக்கை எடுக்கறேன். தயவு செய்து உங்க முடிவை மாத்திக்குங்க.''

வேறு வழியற்ற ரகுராமனின் அந்தச் சரணாகதி கூட்டத்தினரிடம் கொஞ்சம் தெம்பைத் தந்தது.

''இன்னும் எத்தனை நாளைக்கு இதையே சொல்லுவே? நாங்க கலெக்டர் கிட்ட போய் மனு

www.chennaiindians.com

கொடுக்கவா?''

''அவசியமில்லே. அடிச்ச ஆளுங்களைப் பிடிக்க முடியலே. தலைமறைவாயிட்டாங்க. நிச்சயம் டி.எஸ்.பி.யப் பார்த்துத் துரித நடவடிக்கை எடுக்கறேன்.''

கூட்டம் ஒரு வழியாகக் கலைந்தது. ஆனால் உம்மாச்சிக்கு நம்பிக்கையில்லை.

சாப்பாட்டை இறுதி வரை தொட மறுத்து விட்டான்.

முதல் வேலையாக டெலிபோனில் ரங்கசாமியை அழைத்தார் ரகுராமன்.

''சார், வெரி சாரி சார், உங்களுக்கு என்னால உதவ முடியாது. நான் ஆக்‌ஷன் எடுத்தே தீர வேண்டிய கட்டாயத்தை ஜனங்க உண்டாக்கிட்டாங்க. அந்த உம்மாச்சி என்னைப் படாதபாடு படுத்த ஆரம்பிச்சுட்டான்.''

''என்னய்யா இது கோழை மாதிரி உம்மாச்சி, ஊராட்சின்னுகிட்டு. நான் பஞ்சாயத்து எலக்‌ஷன்ல நிக்கிறதுக்காக என்னை 'ஸ்டெடி' பண்ணிக்கிட்டு இருக்கேன். இப்பபோய்க் கழுத்தறுக்கிறியே? அப்புறம் நான் மனுஷனா இருக்கமாட்டேன்.''

''ஐயோ சார், புரியாமப் பேசறீங்க, சூழ்நிலை அப்படி.''

www.cleanindians.com

''என்னா பெரிய சூழ்நிலை? இந்தப் பிரச்னையைச் சமாளிக்க வழி தெரியலேன்னா நீ எல்லாம் இன்ஸ்பெக்டர் வேலைக்கே லாயக்கில்லையா.''

''சார், அதிகம் பேசறீங்க. இதுக்குமேல் என்னால பொறுத்துக்க முடியாது.''

''ஓஹோ, என்னா பண்ணுவீங்க பலவானே? ஒரே ஒரு டெலிபோன் போதும், உன்னை இந்த விஷயத்துல நான் குற்றவாளி ஆக்கிப்பிடுவேன். ஆமா.''

ரகுராமன் விழிகளில் நிஜமாலுமே



கண்ணீருக்குப் பதிலாகக் குருதி. முதல் தடவையாக மனசாட்சி பிசையப்பட்டு ஒடிந்து போய் நாற்காலியில் விழுந்தார்.

இந்தப் பிரச்னையில் இருந்து தப்பிக்கும் வழி தான் யாது?

ரங்கசாமிக்கும் தாம் பிரச்னையில் மாட்ட விருப்பது புரிந்தது. அதன் எதிரொலி காளியிடம் முற்றுப் பெற்றது.

''டேய், அந்த உம்மாச்சிப் பயல வில்லங்கம் வராதபடி தீர்த்துடுங்க. இத பார்த்துட்டு ஒரு பய என் விஷயத்துல இறங்கக் கூடாது. கை போனா புத்தி வந்துடும்னு நெனைச்சேன். அவன், நெனைச்சமாதிரியே அடங்கிட்டான். ஆனா வாலு ரொம்ப ஆடுது. ஒட்ட நறுக்கிடுங்கடா''

''உம்மா, சாப்பிடு உம்மா.''

''டேய் சாப்பிட்றா'' - ஆளுக்கு ஆள் கெஞ்சியும் வாடிப்போன உம்மாவின் துவண்ட உடலுக்குள் ஒளிந்து கிடக்கும் உறுதியான மனசு அசைய மறுத்தது.

சண்முகம் பேச்சு மூச்சின்றிப் பக்கத்தில் சோர்ந்து உட்கார்ந்திருந்தான். வள்ளியம்மையோ கண்களில் கண்ணீர் தாரை தாரையாக வடிய அவன் முன்னால் சோற்றுத் தட்டுடன் உட்கார்ந்திருந்தாள்.

''போலீஸ்காரங்க வந்து பிடிச்சுட்டுப் போகு முன்ன எழுந்து சாப்பிடுப்பா, சாப்பிடுப்பா,''

''ஊஹூம், இவன் வழிக்கு வரமாட்டான். டேய் போலீசுக்குப் போங்கடா.''

போலீஸ் வந்தது. ஒரு ஸ்ட்ரெச்சரில் வைத்துத் தூக்கிப் போனார்கள். வீதியில் நடந்த போராட்டம் ஸ்டேஷனிலும் தொடர்ந்தது. ''மொதல்ல டாக்டரைக் கூப்பிட்டு வைட்டமின் ஊசி போடச் சொல்லுங்க.''

டாக்டர் வந்தார். வைட்டமின் ஊசி போட்டார்.

செருகி விட்டிருந்த உம்மாவின் விழிகளில் சிறிது தெம்பு வந்தது. வலுக்கட்டாயமாகச் சோற்றை ஊட்டப் பார்த்துத் தோற்று, குளூகோஸ் ஏற்றும் முடிவுக்கு வந்தனர்.

ஒவ்வொரு போலீஸ்காரரும் உம்மாச்சியின் அந்த உறுதியான நடவடிக்கைகளால் விரைத்துச் சவமாகவே ஆகிவிட்டிருந்தார்கள். காரியங்களை மிகுந்த அக்கறையோடு செய்தார்கள்.

''சார், மொத வேலையாக் காளியையும், மத்த ஆட்களையும் பிடிச்சு லாக் அப்புல வெச்சாத்தான் உம்மாச்சியை அசைக்க முடியும். இனி ஒரு நிமிஷம் தாமதிச்சாலும் நம்மளை ஆண்டவனாலும் காப்பாத்த முடியாது.''

உம்மா சுருண்டு படுத்துவிட்டான்.

ரைட்டர், ரகுராமன் காதைக் கடிக்க, காளியையும் மற்ற ரவுடிகளையும் தேடி ஒரு படை பறந்தது. ரகுராமன் இப்போது முற்றும் கரைந்திருந்தார். உம்மாச்சியின் உறுதியும் ரங்கசாமியின் பேச்சும் அவரைப் பலவகைகளில் சிந்திக்க வைத்துவிட்டன. சிந்தனையின் விளைவு அவருக்குள் அவமான கரமான வெட்கத்தை உண்டாக்கி, தலையைக் குனியவைத்தது. உம்மாச்சியை நெருங்கினார்.

''உம்மாச்சி, இன்னும் சில மணிக்குள்ள அவ்வளவு பேரையும் பிடிச்சு இந்த இழுத்துக்கிட்டு வந்துட்றோம். இது சத்தியம். நான் பிள்ளைகுட்டிக்காரன், தயவுசெய்து என்னைச் சிக்கல்ல மாட்டி விட்டுடாதே, சாப்பிடு, உம்மாச்சி சாப்பிடு''

கண்ணீர் பொலபொலவென்று அவிழ ரகுராமன் பேசவும் உம்மாச்சி மெள்ள நிமிர்ந்து பார்த்தான்.

''சார், இதை முன்னாலேயே செஞ்சிருந்தா எவ்வளவு நல்லா இருந்திருக்கும். உங்களைப் பார்த்தா பயத்தைவிட மதிப்பும், நம்பிக்கையும்



தான் சார் வரணும். வெறுப்பு வரும்படி நடந்துகிட்டீங்களே நியாயமா சார்? நீங்களும் இந்தச் சமூகத்துல ஒருத்தர். உங்களுக்கு இப்படி ஒரு நிலைமை வந்தா எப்படி இருக்கும்? யோசிச்சு பார்த்தீங்களா? எனக்கு ஒரு ஆசை சார். சண்முகம் அண்ணனுக்கு நியாயம் கிடைக்கறதைவிட, நீங்கள்ளாம் உண்மையா இனிமே நடந்துக்கணும், நடந்துப்பீங்களா சார்?''

''நிச்சயமா உம்மாச்சி, நிச்சயமா!''

ரகுராமன் இந்த முறை நெகிழ்ச்சியுடன் மனம் ஒன்றிப் பேசினார். அவர் உடம்பெல்லாம் சிலிர்த்துவிட்டிருந்தது.

'கல்வியறிவில்லாதவனுக்கு இருக்கும் பொது நல மனப்பான்மையும் சமூகப் பிரக்ஞையும், நிரம்பப் படித்த, பொறுப்பான பதவி வகிக்கும் எனக்கு இல்லாமல் போய் விட்டதே!' நினைத்து நினைத்து வதங்கினார்.

உம்மாச்சியிடமும் தெம்பு மெல்லத் திரும்ப ஆரம்பித்திருந்தது. பழ ரசத்தைப் பருகி, தனது விரதத்தை முடித்துக் கொண்டான். கொஞ்சம் நிம்மதியோடு திரும்பிய போது எதிரே ரங்கசாமி.

ரகுராமன் இந்த முறை நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு அவரைப் படு அலட்சியமாகப் பார்த்தார்.

''என்னா தோஸ்த், வந்திருக்கறது யாரு தெரியுதா? உக்காரக் கூடச் சொல்ல மாட்டியா?''

இதற்குப் பதில் சொல்லி எதற்குக் கன்னித் தமிழைக் கொச்சைப் படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் மௌனம் ரகுராமனிடம்.

''கட்சி மாறிட்டே போல இருக்கே? கைநீட்டிக் காசு வாங்கினதெல்லாம் மறந்து போச்சா? நான் ஒண்ணும் அஞ்சாம் படை இல்லை. நல்லா கேட்டுக்க, இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போயிடலே. உன் கிட்ட நான் பணம் தர்றேன், அதை விட்டெறிஞ்சு இதோ இந்த ஊசு, அந்த

www.cleanindians.com

நொண்டி அம்புட்டுப் பேருகளையும் சமாதானப் படுத்து. இல்லாட்டி நான் மேல் மட்டத்துல வெச்சு உன்னைப் பந்தாடிடுவேன்.''

''நல்லா ஆடுங்க.''-ரகுராமனுக்காக ஏட்டையா பேசினார்.

''ஓஹோ! முடிஞ்சா என் ஆளுங்களைப்பிடி. என்னைப் பிடி. அதையும் பார்ப்பம், வரட்டா?''

ரகுராமன் துளியும் அச்சமின்றி உம்மாச்சியைப் பார்த்தார். அவன் விழிகளில் ஏதோ எரிச்சல்.

''பயப்படாதே உம்மா. இந்த மிரட்டல் என்னை ஒண்ணும் செய்ய முடியாது. நான் எல்லாத்துக்கும் துணிஞ்சிட்டேன். என் தப்புக்கும் நான் பரிகாரம் தேடிக் காட்டா எப்படி?''

''உம்மாச்சி! உனக்கு என் நன்றிப்பா. உன்னால என்ன முடியும்னு நெனைச்சவங்க மூஞ்சியில நல்லா கரியப் பூசிட்டே.'' சரசு பெருமிதத்தோடு பேசினாள்.

சண்முகத்துக்கே அவனைப் பார்க்கச் சந்தோஷமாக இருந்தது.

''எல்லாத்துக்கும் அண்ணன் பழக்கமும் பேச்சும் தான் காரணம்.''

அவன் சண்முகம் பக்கம் தன் மேல் விழுந்த பூக்களைத் திருப்பி விட்டான்.

''இளம் வயசுல நீங்க இப்படி முறையா, சமூகப் பிரக்ஞையோட நடந்துக்கறது எங்களுக்கெல்லாம் ரொம்பத் தெம்பத் தருது சண்முகம்! நாளைய இந்தியா உங்க கையில் தான். இது புண்ணிய பூமி. ஒரு பக்கம் ஆபாசப் புத்தகமும் சினிமாவும் உங்க வயசுக் கூட்டத்தை நாசப் படுத்திக்கிட்டு இருந்தாலும் நடுநடுவே உங்களை மாதிரி இளைஞர்களும் உருவாக இந்த மண்ணோட பண்பும், தவமும் தானப்பா காரணம்.''

பெரியவர் ஒருவர் புகழ்ந்துரைத்தார். வெளியே

www.cleanindians.com



இருட்டி விட்டிருந்தது.

''அண்ணே, அப்ப நான் வரேன். என்னோட அம்மாக் கெழவி காத்துக் கிடக்கும்.''

சொல்லிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான் உம்மாச்சி. வீதியில் நான்கு விளக்குக்கு ஒரு விளக்கு மட்டுமே எரிய - எங்கும் இருள். எளிய ஓட்டு வில்லை வீட்டு அழுது வடியும் பல்புகள் கொஞ்சம் மஞ்சள் வெளிச்சத்தை வாசற் படியில் துப்பி நீண்ட வீதியை இருட்டில் அடையாளம் காட்டின.

''சண்முகம், தெருவிளக்கு ஒழுங்கா எரிய லேப்பா. முனிசிபாலிடியில சொல்லி ஒரு நல்ல வழி பண்ணு.'' வயதான அத்தாச்சி ஒருத்தி வந்து வாயினாலேயே பெட்டிஷன் போட்டாள்.

''நாளைக்கே ஏற்பாடு பண்றேன் அத்தாச்சி. நேத்துக் கூட நல்லாத்தானே எரிஞ்சிச்சு?''

''அது என்னமோப்பா. ஒழுங்கா பல்பு எரிய இந்தக் குடிகாரப்பசங்க எங்க விட்றாங்க? ஒரே அட்டகாசந்தான்.'' அத்தாச்சி போய் விட்டாள். சண்முகம் சரசுவைப் பார்த்தான்.

நெடு நாட்களுக்குப் பிறகு பார்க்கும் கனிவான பார்வை அது.

சூழ்நிலையில் இரவென்றும் பாராமல் இடை விடாது வீடுகளில் ஒலிக்கும் நெசவுத்தறிகளின் ஓட்டம்.

டடக்டக்கு, டடக்டக்கு, டடக்டக்கு, டடக்கு.

டடக்டக்கு, டடக்டக்கு, டடக்டக்கு, டடக்கு.

விடிந்து விட்டது. வீதி மையத்தில் விளக்குக் கம்பத்தின் கீழே ஊரே திரண்டு விட்டிருந்தது. உறங்கிக் கொண்டிருந்த சண்முகத்தை யாரோ வந்து வேகவேகமாக உசுப்பினார்கள். அலறித் துடித்து விழித்தவன் எதிரே கண்ணீரும் கம்பலையுமாக முகங்கள்.

''சண்முகம்..! சண்முகம்..! உம்மா நம்பளை

யெல்லாம் விட்டுட்டுப் போய்ட்டான், சண்முகம். அநியாயமா அவனை யாரோ கொன்னு போட்டுட்டாங்க.''

சண்முகத்தின் கணுக்காலைக் கருநாகம் ஒன்று வெடுக்கென்று கவ்வியது. எழுந்திருந்து ஓடினான். வீதி மையத்தில் எரியாத விளக்குக் கம்பத்தின் கீழே மிகக் கோரமாக உம்மாச்சியின் சடலம் அவனை வரவேற்றது.

''டேய் உம்மா...'' பதறாத அவன் மனமும் பதறச் சடலத்தின் மேல் விழுந்தே விட்டான் சண்முகம். எல்லாரும் உருகி அழுதபோது வள்ளியம்மை மட்டும் அழவில்லை.

''ஏ கிழவி, உன் மகன் அநியாயமாச் செத்திருக்கான். துடிக்கலே நீ? ஈரக்குலையே எங்களுக்கு நடுங்குதே.''

வள்ளியம்மை பேசியவர்களை ஒரு தினுசாகப் பார்த்தாள்.

''நான் ஏன் அழுவணும்? என் மகன் ஒரு நல்ல விஷயத்துக்கான போராட்டத்துல செத்துருக்கான், எனக்குத் துக்கம் இல்லாம இல்லை. ஏழு கடல் அலையும் சமமாகாது, என் துக்கம் முன்னால. அது எனக்குத் தான் தெரியும். அதுக்காக நான் அழலாமா? என் மகன் மாதிரி இன்னும் நூறு நூறு பேர் கிளம்பணும். அப்பத்தான் இந்த அநியாயங்க மாறும். இது புரியாம நான் அழுதா நாளைக்கு நீங்கள்ளாம் உங்க புள்ளைங்களை இழக்கச் சம்மதிப்பீங்களா? நமக்குந் தானே இப்படிக் கஷ்டம் வரும்னு மாஞ்சுல்ல போவீங்க? ஊர் சுபிட்சத்துக்கா்க யாகம் வளர்த்தா அதுல ஆடு மாடுகளைப் பலி கொடுக்கறதில்லையா? அது மாதிரி இதுவும்னு நெனைச்சுட்டுப் போறேன்''

சரசுவுக்கு உம்மாச்சியின் தாயைப்பார்க்க அந்தத் துயரத்திலும் பெருமை பிடிபடவில்லை.

''அம்மா, நீ உன் மகனையே மிஞ்சிட்டே. என்



புருஷனுக்காக இவ்வளவு பேரா? இத்தனை தியாகங்களா?''

''உன் புருஷன் ஒரு பொதுச் சொத்து தாயி. அந்த உத்தமனுக்காக இவ்வளவு கூடச் செய்யலேன்னா இந்தச் சமூகத்துல வாழறதுல ஒரு அர்த்தமுண்டா? தன்கையையே இழந்தும் கூட, அது பழிக்குப் பழி, ரத்தத்துக்கு ரத்தம்னு எகிறிக் குதிக்கலையே? அந்தச் சாத்விகம் எப்பவும் எங்களுக்கு வேணும்மா.''

எல்லாரும் அதை ஆமோதித்தார்கள். சரசுவைப் பார்க்க போலீஸ் வந்தது.. கூட்டத்தில் ஒரே சலசலப்பு.

''இன்ஸ்பெக்டரய்யா! நீங்கள்ளாம் வேலைல தான் இருக்கீங்களா இல்லே தூங்கறீங்களா? உங்களுக்கெல்லாம் எதுக்கு-வெட்டிச் சம்பளம்? முன்ன சண்முகம், இப்ப உம்மாச்சி. அடுத்து யாரு?''

ஒரு பிரஜையின் உக்ரமான கேள்வி முன் மண்டியிட்டார் ரகுராமன். ஒரு 'யாகப் பசு'வாய் உயிர் நீத்துவிட்ட உம்மாச்சியைப் பார்த்தார்.

''இந்த அநீதிக்கும் அக்கிரமத்துக்கும் முடிவு கட்டலேன்னா நான் உங்க நடுவுல தொங்குவேன். இது சத்தியம். அதுமட்டுமல்ல, நான் இருக்கற எந்த இடத்துலையும் இந்த மாதிரி நடக்க விடமாட்டேன்.''

உடைந்த குரலில் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார் இன்ஸ்பெக்டர். அவர் பேச்சு சிலருக்கு ஆறுதலாக இருந்தது. சிலருக்கு எரிச்சலாக இருந்தது.

போலீசாரோ உம்மாவின் சடலத்தைச் சாக்பீசால் கட்டம் கட்டி, போட்டோ எடுத்து ஸ்ட்ரெச்சரில் தூக்கிக் கிடத்தினார்கள். போலீஸ்வேன் ஒன்று செருமிக் கொண்டு வந்து நின்றது. அதில் உம்மாச்சி அடங்கினான்.

www.cleanindians.com

ரகுராமன் சண்முகத்தைத் தனியே அழைத்தார்.

''மிஸ்டர் சண்முகம், நீங்க தைரியமா துளிக் கூடப் பயப்படாம இந்த ஏழை மக்களுக்காகப் பாடுபடலாம். உங்களை விழுங்கப் பார்த்த முதலையை இன்னும் சில மணிக்குள்ள நான் பிடிச்சிடுவேன். உம்மாவோட கொலைல இருந்து உங்கமேல நடந்த தாக்குதல் வரை சகலத்துக்கும் முடிவு இன்னிக்கே தெரிஞ்சிடும். மனசு தளர்ந்துடாதீங்க. அப்புறம் இவ்வளவு பேர் தியாகமும் வீணாயிடும்.''

பேசி விட்டுப் புறப்பட்டார். வானில்கூட மேகத்தை மழையாகக் கரைக்க கதிரவன் முனைந்திருந்தான்.

•

சூப்பிரண்டு ஆஃப் போலீஸ், இன்ஸ்பெக்டரைக் கைது செய்ததற்காக வருத்தப்பட வில்லை, மாறாகச் சந்தோஷம் தான் அவரிடம் களை கட்டியது. ''மிஸ்டர் ரகுராமன், உங்க சுயதரிசனம் நம்ம இலாக்காவை நிச்சயம் பெருமைப் படுத்தும்'' என்று மட்டும் சொன்னார்.

எஸ்.பி.யின் மேஜையின் மேல் ரகுராமன் பதவியில் இருந்த காலத்தில் வாங்கிய லஞ்சப் பொருள்கள் காட்சியளித்தன. அவற்றுள் ரங்கசாமி கொடுத்த மனைப் பத்திரமும் பிற பொருள்களும் துண்டாகப் பளிச்சென்று தெரிந்தன

ரங்கசாமியின் வீட்டுப்படியேறி லஞ்ச ஒழிப்புப் போலீசார் அவர் கைகளில் விலங்கு மாட்டியபோது, அந்த விலாங்கு மீன் நீர் என்று கருதித் திராவகத் தொட்டியில் விழுந்த அவஸ்தையை உணர்ந்து நடுங்கியது.

''மிஸ்டர் ரங்கசாமி, உங்க பாதுகாப்பான அரசியல் பின்னணியை விட்டு இப்பத்தான் வசம்மா எங்க பிடியில சிக்கியிருக்கீங்க, கூடியசீக்கிரம் உங்க கையாட்களே உங்களைப்

www.cleanindians.com



பலவகையில் எங்ககிட்ட பிடிச்சுக் கொடுப்பாங்கன்னு நம்பறோம். இனிமே நீங்க சுதந்திரமான காற்றைச் சுவாசிக்கறதுங்கறது இந்த ஜென்மத்துல சாத்தியம் இல்லை.''

ரங்கசாமி தலையைக் கவிழ்ந்துக் கொண்டார்.

''இந்தக் காலத்து இளைஞர்கள் சின்னச் சின்னத் தியாகங்களுக்குத் தங்களைத் தயார்படுத்திக்கிட்டா கூடப் போதும். இந்தச் சமுதாயத்துல முதலை, சுறான்னு ஒருத்தர் கூட நடமாடமுடியாது. எங்கும் அமைதிதான், எதிலும் முன்னேற்றந்தான். அப்புறம் வறுமையாவது கஷ்டமாவது? இந்த இளைஞர்கள் ஆண்டுல சண்முகமும், உம்மாவும், இன்ஸ்பெக்டர் ரகுராமனும் அதற்கு மிகச் சிறந்த உதாரணம். உதாரணங்களின் எண்ணிக்கை கூடணும்.''

நீண்ட அந்த எளிய தெருவில், உம்மாச்சியின் படத்தைத் திறந்து வைத்துவிட்டு டி.எஸ்.பி. பேசும்போது, மேடையில் உட்கார்ந்திருந்த வள்ளியம்மையால் உம்மாச்சி நினைப்பைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அது ஆனந்தக் கண்ணீராகவும், துக்கக் கண்ணீராகவும் வந்து கொட்டியது.

அங்கே வந்து, வழியும் அவளின் கண்ணீரைத் துடைத்து விட்டான் சண்முகம். மார்போடு அந்த வயதான கிழவியை அணைத்துக் கொண்டு, ''அவன் போனா என்ன வள்ளியம்மா? நானும் உன் மகன் தான். எனக்கு மட்டும் அம்மா இருக்காளா என்ன?'' என்று அவன் கண்ணீருடன் தன் கண்ணீரைக் கலந்தான்.

